
மதுரை

- தெய்வத் திருநகர்
- கோவில் அமைப்பு விளக்கம்
- திருவிளையாடல் புராண வரலாறு



...ரீ மீனாட்சி கல்யாணம்

மதுரை

தெய்வத் திருநகர்
ஸ்ரீ மீனுக்ஷி அம்மன் கோவில் அமைப்பு
திருவிளையாடல் புராணம்

●

வெளியிடுபவர்

T. G. S. பலராம் ஐயர்

எழுதியவர்

புலவர் **சி. இரா. சாரநாத்**

●

ஸ்ரீ கார்த்திகேயா பப்ளிகேஷன்
2-A, பாதே ஹனுமந்தையர் சந்து
ராமநாதபுரம் ரோடு (காமராஜர் சாலை)
மதுரை - 625 009.

விலை ரூ. 3-00

முதல் பதிப்பு- 1976
இரண்டாம் பதிப்பு — 1978
மூன்றும் பதிப்பு — 1981
நான்காம் பதிப்பு — 1982
ஐந்தாம் பதிப்பு — 1983
ஆறும் பதிப்பு — 1983



அச்சிட்டோர் : விஜயா பிரிண்டர்ஸ், மதுரை.

மதுரை

தெய்வத் திருநகர்

பரஞ்சோதி முனிவர், பாண்டிய நாட்டைப் பல சிறந்த குணங்களைக் கொண்ட பெண்ணாக உருவகித்து—மதுரை நகரை அப் பெண்ணின் அழகிய முகமாக்கிக் காட்டுகிறார். இவ்வுலகையே அழகியப் பெண்ணாக உருவாக்கும் போது அப்பெண்ணின் மார்பில் ஒளிவீசும் பதக்கத்தைப்பாண்டிய நாடாக்கி—அப்பதக்கத்தில் மின்னும் வைர மணிக் கற்களை — பாண்டிய நாட்டிலுள்ள பிற நகரங்களாகவும் பதக்கத்தின் நடுவில் விழிபறிக்கும் ஒளி வீசித் திகழும் சிறந்த மாணிக்கக் கல்லே மதுரை நகர் என்றும் குறிப்பிடுகிறார்.

(திருவிளை: புரா : திருநகர் : 3)

அவ்வாறே

'பொன்மலை எனப்படும் மேருகமலை முதல் உள்ள எல்லாத் தலங்களிலும் எழுந்தருளி உள்ள லிங்கம் — மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள லிங்கத்திற்குப்பின் தோன்றியவை மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள சிவலிங்கத்தின் அருட்குறியால் — அதில் இருந்தே மற்ற தலங்களில் உள்ள லிங்கங்கள் தோன்றின' — என்று திருவிளையாடற் புராணம் மூர்த்தி விசேடப் படலத்தின் மூன்றாம் செய்யுள் மதுரைத் தலத்தில் உள்ள சொக்கலிங்கத்தின் தொன்மையையும் சிறப்பையும் எடுத்துக் காட்டுகிறது.

பழங்காலத்தில் மதுரை மாநகரின் தோற்றம் ஓர் அழகிய தாமரை மலரைப் போன்றிருந்ததாகப் பரிபாடல் கூறுகிறது.

ஏனெனில்

மதுரை நகரின் தெருக்கள் தாமரை மலரின் உள் இதழ்களைப் போல் அடுக்கடுக்காக அமைந்துள்ளன. மீனாட்சி அம்மன் கோவில் தாமரை மலரின் நடுவில் உள்ள மொட்டைப்போல் அமைந்துள்ளது. தாமரை மலரில் உள்ள மகரந்தத் தூள்களைப் போல் மதுரை நகர மக்கள் வாழ்கின்றனர். மதுரையை நோக்கி—வாழ்வைத் தேடிவரும்

இரவலர் கூட்டம் தாமரையில் தேன் பருக வரும் வண்டுகளுக்கு ஒப்பாவார்.

— என்று பரிபாடல் ஆசிரியர் உருவகித்துக் காட்டுகிறார்.

மதுரை நகருக்கு 'விழாநகரம்' என்ற சிறப்புப் பெயர் உண்டு. நாள்தோறும் ஏதேனும் ஒரு விழா — யாதானும் ஒரு காரணம் பற்றி— எங்கேனும் ஒரு மூலையில் நடைபெற்றுக் கொண்டே இருக்கும் தகுதி நோக்கி- இச்சிறப்புப் பெயரை மதுரை மாநகர் பூண்டது. இவ்விழாக்களுள் 'எழுநாளத்தி விழா' மிகச் சிறப்புடைய விழாவாகப் பண்டைக் காலத்தில் — மதுரை நகரில் கொண்டாடப் பட்டதாய் இலக்கியங்களின் மூலம் அறிகின்றோம். இவ்விழா ஏழு நாட்கள் தொடர்ந்து நடைபெறுவதால் இப்பெயர் பெற்றது. இவ்விழாவிற்கு 'கணம்' என்ற வேறு பெயரும் உண்டு. இவ்விழாவிற்குப் பல ஊர்களில் இருந்தும் மக்கள் திரண்டு வருவர்.

(மதுரைக் காஞ்சி 427-428)

வையை ஆறு பண்டைக்காலத்தில் வற்றாத நீர் வளமையுடன் பாய்ந்து கொண்டிருந்தது. அடிக்கடி, ஆற்றில் வெள்ளம் கரை மீறிப் பெருக்கெடுத்து ஓடிவரும் அதன் விளைவாகக் கரைப் பகுதியில் வாழும் மக்களுக்குத் தீங்கு நேராமல் காப்பதற்கு என்றே 'கரைக் காவலர்கள்' என்ற பணியாட்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் வெள்ளம் பெருக்கெடுத்து வரும்போது கரைகளைக் காத்து நிற்பர் — என்று பரிபாடலின் பத்தாம் பாட்டு விவரிக்கிறது.

'வையை ஆற்றைக் கடப்பதற்குத் துறைகள் தோறும் பலவகை ஓடங்கள் நிறுத்தப்பட்டிருக்கும். அவ்வோடங்கள் குதிரை முகத் துடனும், யானை முகத்துடனும், சிங்க முகத்துடனும் அமைக்கப் பட்டிருக்கும். இவையன்றி, சிறு துறைகளில் கட்டு மரப்படகுகளும் இருக்கும்' - என்ற செய்தியை சிலப்பதிகாரம் (13 : 176—178) மூலம் அறிகின்றோம்.

இச்சிறப்பு நோக்கியே இளங்கோவடிகள், "புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி வையை என்ற பொய்யாக்குலக் கொடி" — என்று வையை ஆற்றைப் புகழ்கின்றார்.

கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பிளினி (Pliny) என்பவரும், கி. பி 140 இல் வாழ்ந்த தாலமி (Tolemy) என்பவரும் தத்தம் காலங் களில் மதுரை சிறந்து விளங்கியமையைத் தத்தம் நூல்களில் விரிவாக எழுதி உள்ளனர்.

சிறந்த மேனாட்டு வரலாற்றாசிரியரான (Shenoy) என்பவர் எழுதிய (Madura the Temple City) எனும் வரலாற்று நூலில், ''திராவிட நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக உறைவிடமாகத் திகழ்வது மதுரை. இது தென்னிந்தியாவின் 'ஏதன்ஸ்' நகரம், (Madura is the Athens of South India'')-என்று குறிப்பிட்டுள்ளார்.

(Madura-Dt. Gazetteer) — நமக்குக் கீழ்க்கண்ட செய்தியைத் தருகிறது

மதுரை நகரில் ரோமர் குடியிருப்பு (Roman's colony) ஒன்று இருந்தது. மதுரையைச் சுற்றிலும் உள்ள இடங்களில் ரோம நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கி. பி. 1839 இல் மதுரைக்கு அருகில் உள்ள திருமங்கலத்தில் தோண்டிப் பார்த்ததில் (Solidus of Zeno) கண்டு பிடிக்கப்பட்டது.

கி. மு. 27இல் ரோமச் சக்கரவர்த்தியான அகஸ்டஸ் சீஸரிடம் பாண்டிய அரசன் தூது அனுப்பி உள்ளான். சீஸிரின் 63 தங்க நாணயங்களும், பிற மன்னர்களின் நாணயங்களும் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பழனி வட்டத்தில் கலயம்புத்தூரில்-பூமிக்கடியில சிறு சிறு பானைகளில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மதுரை மாநகரின் கடைத்தெருக்கள் இரண்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தன. அவை நாளங்காடி என்றும் அல்லங்காடி என்றும் கூறப்பட்டன. இவற்றுள் —

நாளங்காடி என்பவை காலை முதல் மாலை வரை பகற்பொழுது மட்டும் வாணிகம் செய்யக்கூடிய கடைகளைக் கொண்ட தெருக்கள். அல்லங்காடி என்பவை மாலை நேரத்தில் இருந்து இரவுப் பொழுது முழுவதும் வியாபாரம் செய்யக் கூடிய கடைகளைக் கொண்ட தெருக்கள்.

பாண்டிய மன்னர்களின் ஆட்சியில் தமிழுடனும் சைவத்துடனும் ஒன்றிப் புகழுடன் திகழ்ந்த மதுரை மாநகர் 1310க்குப் பின் முகமதியரின் ஆட்சிக்கு உட்பட்டது. பாண்டிய நாட்டில் ஆட்சி பீடத்திற்காகப் போரிட்டுக் கொண்ட சுந்தரபாண்டியன்—வீரபாண்டியன் சகோதரர்களின் பகைமையைப் பயன்படுத்திக் கொண்டான் மாலிகாபூர். தென்னகத்துச் செல்வங்களைக் கொள்ளையிட தெற்கே வந்த மாலிக்காபூர் சுந்தரபாண்டியனுக்குப் போரில் உதவிசெய்து - மதுரையில் முகமதியர் ஆட்சியை நிலைநாட்டி விட்டான். 1310 முதல் தொடர்ந்து 41 ஆண்டுகள் மதுரை-முகமதியர் ஆட்சியில் இருந்தது.

1377இல் மதுரையில் இந்துக்கள் ஆட்சி மலர்ந்தது. நாயக்கருள் 1623இல் ஆட்சிக்கு வந்த திருமலை நாயக்கரே வரலாற்றில் புகழ் பெற்றவர். இவரது தலைநகரம் திருச்சி நகரமாய் இருந்தது. இவர் அடிக்கடி நோய்வாய்ப்பட்டார். மதுரை மீனாட்சி சுந்தரர் இவரது கனவில் தோன்றி, ''மதுரைக்கு நிலையாய் வந்து விட்டால் நோய் குணமாகும்'' என்று கூறியமையால் இவர் தலைநகரை மதுரைக்கு மாற்றினார். நோயும் குணமாயிற்று. அந்நன்றிக் கடனாய் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலையும் அதன் சுற்றுத் தெருக்களையும் புதுப்பித்தார். அல்லாமலும் -

திருமலை நாயக்கரின் ஆண்டு வருமானம் 12, 00,000 பவுன்கள். இவற்றில் 41,000 பவுன்கள் வருமானம் தரக்கூடிய நிலங்களை மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு அவர் எழுதி வைத்தார் என்ற செய்தியை 'Shenoy' எழுதியுள்ள 'Madura the Temple City'- என்ற நூலின் மூலம் அறிகின்றோம்.

பாண்டிய மன்னர்களின் காலத்தில் மீனாட்சி அம்மன் கோவில் பதினான்கு கோபுரங்களுடன் திகழ்ந்தது. மாலிக்காபூரின் படையெடுப்பில் இடிந்து, சிதைந்த மீனாட்சி சந்நிதியும் சொக்கர் சந்நிதியுமே மிஞ்சின. விசுவநாத நாயக்கர் காலம் முதல் நாயக்க மன்னர்கள் செலவிட்ட 120 இலட்சம் ரூபாயும் உழைத்த 120 ஆண்டு காலமும் — ஓரளவு மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் பழைய பெருமையை உருவாக்கித் தந்திருக்கிறது.

மீனாட்சி அம்மன் கோவிலின் பரப்பு பதினைந்து ஏக்கர். இதன் வெளிச்சுவர் 847 அடியும் 792 அடியும் கொண்ட நீண்ட சதுர வடிவில் அமைந்த கற்சுவர்.

விலைமதிப்பற்ற நகைகளுக்கு மீனாட்சி ஆலயம் புகழ் பெற்றது. அந்நகைகளுள் 'தொங்கலணி' மிகப்பழமையானது.

மதுரை மட்டுமன்றி, இந்நகரைச் சுற்றி உள்ள திருப்பரங்குன்றம், அழகர் மலை, திருவாதவூர், திருப்புவனம், யானை மலை, நாகமலை, திருவேடகம் போன்ற பல தலங்களும் புராண, இலக்கிய, வரலாற்றுப் புகழுடன் திகழ்கின்றன. எனவே, மதுரை மாநகர் அன்று போல் இன்றும்-என்றும் தனிச் சிறப்புடனும் திகழ்வதில் வியப்பேது?

மதுரை

(ஸ்ரீ மீனுக்ஷி அம்மன் கோவில் அமைப்பு)

மதுரை நகருக்கு வருகை தருவோர் முதலில் செல்லும் இடம் மீனுட்சி அம்மன் கோவில். நாமும் கோவிலுக்குச் சென்று வருவோம். வாருங்கள்.

மீனுட்சிஅம்மன் சந்நதி வழியாகக் கோவிலுக்குள் நுழைந்ததும் முதலில் நாம் காண்பது அஷ்ட சக்தி மண்டபம். அதாவது எட்டு சக்திகளின் மண்டபம். இதன் வாயிலில் விநாயகரும் முருகனும் இருபுறமும் வீற்றிருந்து வருவோருக்கு வாழ்த்து கூறி வரவேற்கின்றனர். அண்மையில் புதுப்பிக்கப்பட்ட மீனுட்சி-சுந்தரர் திருமணக் கோலம் சுதையில் காட்சி அளிக்கிறது. மண்டபத்தின் இருபுறமும் மீனுட்சியின் பிறப்பு முதல் திருமணம் வரை நடைபெற்ற காட்சிகள் ஆறு சித்திரங்களாய்ச் சாந்தில் வரையப்பட்டிருக்கிறது. சுருக்கமாகச் சொன்னுல் கோவிலுக்குள் நுழையும் நமக்கு அக்கோவிலைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு உரிய முகவுரையாக இம்மண்டபம் அமைக்கப் பட்டிருக்கிறது. தேங்காய், பழம் விற்கும் கடைகளும் இம்மண்டபத்திலேயே உள்ளன.

அஷ்டசக்தி மண்டபத்தைக் கடந்ததும் 160 அடி நீளம் உள்ள மீனுட்சிநாயக்கர்மண்டபத்தை அடைகின்ருேம். இம்மண்டபம் திருமலை நாயக்கரின் அமைச்சர்களுள் ஒருவரான மீனுட்சி நாயக்கரின் பெயரால் அமைந்துள்ளது. மேலே யாளியும் கீழே சிறுசிறு சிற்பங்களும் கொண்ட ஆறு வரிசைத் தூண்கள் இம்மண்டபத்தை அலங்கரிக்கின்றன. இம்மண்டபத்தின் மேற்குக்கோடியில் 1008 சிறு விளக்குகளைக் கொண்ட திருவாட்சி அழகுபட அமைக்கப்பட்டுள்ளது. பெரிய பித்தளைச் சட்டத்தால் ஆக்கப்பட்ட இத்திருவாட்சி சிவகங்கைக் குறுநில மன்னரால் அன்பளிக்கப்படது.

மீனுட்சி நாயக்கர் மண்டபத்தைக் கடந்ததும் நாம் அடைவது முதலி மண்டபம். போதிய வெளிச்சம் இல்லாமையால் இம்மண்டபத்திற்கு இருட்டுமண்டபம் என்ற காரணப் பெயரும் வழங்குகிறது. இங்குள்ள பிக்சாடனர், மோகினி, அனுசூயா மற்றும் இம்மண்டபத்தைக் கட்டிய கடந்தை முதலியார் ஆகிய எட்டு வகைச் சிற்பங்கள் அழகு மிக்கவை. இவற்றுள் மோகினியின் சிலை உயிர்ச்சிலையாய் எழில் சிந்தக் காட்சி அளிக்கிறது

முதலி மண்டபத்தைக் கடந்ததும் நாம் காண்பது பொற்ரு மரைக்குளம். குளத்தில் இறங்கி நீரில் நம் கால்களை நனைத்துச் சுத்தம் செய்து கொள்கிருேம். அதோ! குளத்தின் நடுவே உள்ள பெரிய தூணிற்கு வடப்புறம் சிறிய பாலம் இருக்கிறதே இதுதான் திருவள்ளு வருக்கு உரிய சங்கப் பலகை மிதந்த இடம் என்பர். குளத்தைச் சுற்றி உள்ள கீழ்- வடபுறச் சுவர்களில் இறைவனின் 64 திருவிளையா டல்களைச் சித்தரிக்கும் அழகிய ஓவியங்கள் (இப்பொழுது கலைக் காட்சிச் சாலைக்கு மாற்றப்பட்டிருக்கிறது)-தென்புறச் சுவரில் திருப் பனந்தாள் திருமடத்துத் தலைவரால் அளிக்கப்பட்ட 1330 திருக்குறள் பளிங்குக் கற்களில் காணப்படுகின்றன.

குளத்தின் தென்மேற்கு மூலையில் திருநீற்றுப்பிள்ளையார் அருள் சுரக்கின்ருர். குளத்தின் மேற்குப் பகுதியில்- இராணி மங்கம்மாள் கருங்கற்களால் கட்டித்தந்த முகமண்டபம் காட்சி தருகிறது. இம் மண்டபத்தில் ராணி மங்கம்மாளின் உருவமும் இராமையரின் உருவமும் காட்சி அளிக்கின்றன.

இம்மண்டபத்திற்கு எதிரில் சுவந்தீஸ்வரர் கோவிலும், அதனை அடுத்து ஊஞ்சல் மண்டபமும் உள்ளன. இங்கு கருங்கற் தூண் களைக் கொண்ட ஊஞ்சல் மேடை இருக்கிறது. வெள்ளிக்கிழமை மற்றும் சிறப்பு நாட்களில் இம்மேடையில் அம்மனும் சுவாமியும் எழுந் தருளப் பண்ணி, ஊஞ்சலாட்டுவர் சில சமயம் இளம் பெண் குழந்தை களின் கோலாட்டமும் இங்கு நடப்பதுண்டு.

ஊஞ்சல் மண்டபத்தைத் தாண்டியதும் கிளிக்கட்டு மண்டபம் வருகிறது. இங்கு பெரிய கூண்டில் மீனுட்சிஅம்மனுக்கே உரிய கிளிகள் வளர்க்கப்படுகின்றன. இம்மண்டபத்தின் தூண்கள் பல வகையிலும் பெருமை பெற்றவை. கிளிக் கூண்டு தற்சமயம் விபூதி விஞயகர் சிலைக்குப்பின் புறம் அமைக்கப்பட்டிருக்கிறது.

கிளிக்கட்டு மண்டபத்திலிருந்து-வேம்பத்தூரார் கோபுரவாசல் வழியாக நாம் அம்மன் சந்நிதிக்குள் செல்கிருேம். அம்மன் கோவில் இரண்டு பிராகாரங்களைக் கொண்டது. இரண்டாம் பிராகாரத்தில் தங்கக் கொடிமரம், திருமலை நாயக்கர்மண்டபம் போன்றன உள்ளன. இப்பிராகாரத்தில் உள்ள ஆறுகால் பீடத்தில் தான் குமர குருபரரின் மீனுட்சி அம்மைப் பிள்ளைத்தமிழ் அரங்கேற்றப்பட்டது. இதன் வாசல் வழியாக மகா மண்டபத்தை அடைகின்ருேம். இதுவே முதல் பிராகாரம். பள்ளி அறையும் இங்கே தான் இருக்கிறது. மேற்கே உள்ள கருவறையில் நுழைகின்ருேம் அருள் வடிவாய், நின்ற கோலத்தில், அன்னை மீனுட்சி காட்சி தருகிருள். அந்தச் சக்தியை வணங்கி விட்டு வெளியே வரும் போது- நம் உடலிலும் உள்ளத்திலும் உயிரிலும் ஒரு புதிய சக்தியே ஊற்றெடுத்துப்பாய்வதை உணர்கிருேம். இக்கோவிலின் தனிச் சிறப்பு இது!

அன்னையை வணங்கிய நாம் கிளிக்கட்டு மண்டபம் வழியாக சுவாமிகோவிலுக்குச் செல்லும்போது நம்மை எதிர்நோக்கி ஆசி அருளி வரவேற்கிறார் - எட்டு அடி உயரம் உள்ள முக்குறுணி விநாயகர். இவருக்கு விநாயகர் சதுர்த்தி அன்று முக்குறுணி அளவு அரிசியில் கொழுக்கட்டை செய்து படைப்பர். இதனால் இவர் இப்பெயர்பெற்றார். விநாயகரின் அருளாசியுடன் சுவாமிக் கோவிலை வலம்வந்து கம்பத்தடி மண்டபத்தையும் அடைகின்றோம். இம்மண்டபம் மிகச் சிறந்த சிற்பங்களுக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளதைக் காண்கிறோம்

12 அடி உயரமுள்ள துவார பாலர்களைக் கடந்து சந்நதிக்குள் நுழைகின்றோம். முதற் பிராகாரத்தில் திருவிளையாடற் புராணம் அரங்கேற்றப்பட்ட ஆறுகால் பீடம் காட்சி அளிக்கிறது. ஆறுகால் பீடத்தைக் கடந்து வெள்ளியம்பலத்திற்கு வருகிறோம். கால்மாறி ஆடிய நடராசர் தரிசனம் தருகிறார். பின், இந்திர விமானம் எனப்படும் கருவறைக்குள் சென்று சுந்தரேஸ்வரரை வணங்குகிறோம்.

சுவாமியை வணங்கி விட்டு — ஆயிரங்கால் மண்டபத்திற்கு வருகின்றோம், இங்கு சிறந்த கலைப் பொருட்காட்சி நிறுவப்பட்டிருக்கிறது

ஆயிரங்கால் மண்டபத்திற்குத் தெற்கே புதிதாக அமைக்கப்பட்ட மண்டபம் — மங்கையர்க்கரசி மண்டபம். இம்மண்டபத்தின் தெற்கே உள்ள மருதுபாண்டியரால் கட்டப்பட்ட சேர்வைக்கார மண்டபத்தையும், அழகிய மரவிதானம் கொண்ட திருக்கல்யாண மண்டபத்தையும் பார்த்துவிட்டு ஆடி வீதியை வலம் வருகின்றோம்.

கோவிலுக்கு வெளியே- கிழக்குக் கோபுரத்திற்கு எதிரே உள்ள வசந்தமண்டபத்தையும் (புதுமண்டபம்) இராயகோபுரத்தையும் பார்த்தகையோடு நம் பயணம் தொடர்கிறது.

1634-65 இல் திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட மஹாலையும் நகரின் எல்லையில் அமைந்துள்ள வண்டியூர் தெப்பக்குளத்தையும் பார்த்துவிட்டு தமுக்கம் மாளிகைக்கு வருகிறோம். தமுக்கம் என்ற தெலுங்குச் சொல்லுக்கு கோடை இல்லம் (Summer House) என்பது பொருள். இதன்மேல் தளம் கவிழ்த்து வைக்கப்பட்ட தாமரை மலரை போல் இருப்பதால் இதைத் தாமரை மன்றம் (Lotus House) என்று கூறுவர். தற்போது தமுக்கம் மாளிகையில் காந்தி கண்காட்சி சாலை (Gandhi Museum) அமைக்கப்பட்டுள்ளது.

மதுரையின் சுற்றுப்புறம் :

மதுரையின் கிழக்கே 12கல் தொலைவில் உள்ளது திருமாலிருஞ் சோலை என்னும் அழகர் கோவில், மலைமீது நூபுரகங்கை என்னும்

சிலம்பாறு தீர்த்தம் இருக்கிறது. முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான பழமுதிர் சோலேயும் இங்குதான் இருக்கிறது.

மதுரையில் இருந்து தெற்கே ஆறு கல் தொலேவில் உள்ளது திருப்பரங்குன்றம். இது சூரனே வதைத்து தேவர்களே சிறை மீட்டு இந்திரன் மகளான தெய்வயானேயை மணம் செய்து கொண்ட முருகன் மணக்கோலத்தில் காட்சி தரும் தலம்

முருகனின் முதல் படைவீடு திருப்பரங்குன்றம். கடைசி ஆறுவது படைவீடு பழமுதிர் சோலே. முதல் படைவீடும், கடைசி படைவீடும் மதுரையிலேயே அமைந்துள்ளது மதுரையின் புனிதத் தெய்வீகத்திற்கு பகரும் சான்றுகளாம்!

மதுரையில் இருந்து மேலூர் செல்லும் வழியில் 16 கல் தொலேவில் உள்ளது மாணிக்கவாசகர் பிறந்த தலமான திருவாதவூர். வழியில் வைணவத் தலங்களான திருமோகூர், யானேமலே ஆகியன உள்ளன. மதுரைக்குக் கிழக்கே 12 கல் தொலேவில் உள்ளது திருப்புவனம். இதைப் புஷ்பவனம் என்றும் காசிக்குச் சமமான புனிதத் தலம் என்றும் கூறுவர்.

இவ்வாறு மதுரை நகரும் — அதனேச் சுற்றியுள்ள பகுதிகளும் தெய்வீகச் சிறப்புடன் திகழ்வதால் மதுரை மாநகர் எக்காலமும் நீங்காச் சிறப்புடன் திகழ்கிறது.

திருவிளேயாடல் புராணம்

சிவபெருமான், தன் அடியார்களே ஆட்கொள்வதற்காகப் பல திருவிளேயாடல்களே நிகழ்த்தியுள்ளார். சிவபெருமான் நிகழ்த்திய திருவிளேயாடல்கள் அறுபத்தி நான்கு. திருவிளேயாடல்களே நிகழ்த்திய இடம் மதுரைமாநகர். இவற்றைப் பரஞ்சோதிமுனிவர், திருவிளேயாடற்புராணம்' — என்ற நூலாக எழுதி அருளி உள்ளார், இந்நூல் உயர்ந்த இலக்கிய நடையில் — மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திரு ஆலவாய்க் காண்டம் — என்று மூன்று பெரும் பிரிவு களேக் கொண்டது. மதுரைக் காண்டத்தில் 18 படலங்களும், கூடற் காண்டத்தில் 30 படலங்களும், திருவாலவாய்க் காண்டத்தில் — 16 படலங்களும் என்று 64 படலங்களில் 64 திருவிளேயாடல்கள் கூறப் பட்டுள்ளன. கடம்பவனம், திருவாலவாய், கூடல் மாநகர் என்பன மதுரைக்குப் பழங்காலத்தில் இருந்த வேறுபெயர்களே. இப்பெயர்கள் மதுரைக்கு அமையக் காரணமான நிகழ்ச்சிகளும் இதில் கூறப் பட்டுள்ளன.

முதலில், மதுரையின் புண்ணியத் தீர்த்தமான பொற்றுமரைக் குளம் தோன்றிய வரலாறு. அங்கே 'கடம்பவனம்' என்னும் பெயரில் மதுரை தோன்றிய வரலாறும் கூறப்பட்டுத் தொடர்ந்து இறைவனின் பிற திருவிளையாடல்களும் கூறப்படுகிறது. அவற்றை இச்சிறு கட்டுரையின் மூலம் சுருக்கமாகக் காண்போம்.

1. பொற்றுமரைக்குளம்

தேவர்களின் அரசன் தேவேந்திரன். இவன் 'விருத்திராசுரன்' என்ற கொடிய அரக்கனைக் கொன்றுன். எனவே, 'பிரம்மஹத்தி' என்ற குற்றத்திற்கு ஆளானுன். இக்குற்றம் நீங்க, மண்ணுலகத்திற்கு வந்தான். பல புண்ணிய நதிகளில் நீராடினுன். புனிதத் தலங்களில் இறைவனை வழிப்பட்டான். என்றுலும், 'பிரம்மஹத்தி' என்ற பாவம் நீங்கவில்லை. கடைசியில் கடம்பவனத்திற்குள் புகுந்தான். அங்கே, ஒரு பெரிய கடம்ப மரத்தின் அடியில் சிவலிங்கம் இருப்பதைப் பார்த்தான். பெரு மகிழ்ச்சி அடைந்தான். ஏனென்றுல் அது, 'தானே தோன்றி முளைத்தச் சிவலிங்கம்.

அருகில் இருந்த குளத்தில் குளித்தான். தேவலோகத்தில் இருந்து பூசைக்கு வேண்டிய பொருட்களைக் கொண்டுவரச் செய்தான். ஆனுலும் —

பூசைக்கு, மணம் மிகுந்த மலர் எதுவும் அங்கு கிடைக்கவில்லை. வருந்தினுன். துயரம் நெஞ்சை அடைத்தது. உள்ளம் சோர்ந்தான். அன்பர்களின் துயரகாணச் சகிப்பானு இறைவன்? கடவுளின் அருள், கருணையாக மாறியது. அந்தக் கருணை, அங்கிருந்த குளத்தில், பொற்றுமரை மலர்களாக மலர்ந்து ஒளியும் மணமும் ஒரு சேர வீசின. பொற்றுமரைகள் மலர்ந்த குளம் - 'பொற்றுமரைக்குளம்' - எனப் பெயர் பெற்றது. அம்மலர்களால் இறைவனைத் தொழுதான் இந்திரன். கருணையே வடிவான சோமசுந்தரக் கடவுள், தேவேந்திரனின் பக்திக்கு மகிழ்ந்தான். அவனிடம் -

''சித்திரை மாதம் சித்திராபௌர்ணமி தோறும் இங்கு வந்து என்னை வணங்கினுல் ஓராண்டு என்னைப் பூஜை செய்த பலன் கிடைக்கும்! - என்று கூறி, அவனது 'பிரம்மஹத்தி தோஷத்தையும் நீக்கினுர்.

தேவர் தலைவனும், சொக்கனுதரைத் தன் மனக்கோவிலில் பிரதிஷ்டை செய்து, தன் தேவலோகம் சென்று பன்னெடுங்காலம் நல்லாட்சி புரிந்தான்.

2 வெள்ளையானை

காசி நகரில், கங்கைக் கரையில் - சிவலிங்கத்திற்குப் பூஜை செய்து வந்தார், துருவாச முனிவர். அவரது பக்திக்கு மகிழ்ந்தார் சிவபெருமான். தம் முடியில் உள்ள தெய்வீக மணம் கமழும் தாமரை மலரை முனிவருக்கு அருளினுன் இறைவன்.

இறைவன் தந்த மலருடன் தேவலோகத்திற்கு வந்தவர் முனிவர். அச்சமயம் - தேவேந்திரன், அசுரர்களை வென்று வெற்றி விழா கொண்டாடிக் கொண்டிருந்தான். அதோ!

வெள்ளையானையின் மீது ஏறி பவனி வரும் தேவேந்திரனைப் பாருங்கள்! முகத்தில் கர்வத்தின் களை; கண்களில் வெற்றியின் போதை! தேவர்கள், பவனி வரும் தங்கள் அரசனுக்குப் பற்பல பொருட்களை காணிக்கையாகத் தந்தனர். துருவாச முனிவரும் தம்மிடம் இருந்த தெய்வீக மலரைக் காணிக்கையாகத் தந்தார். வெற்றிப் போதையில் இருந்த அப்பேதை - முனிவரின் பெருமையை மறந்து - தெய்வீக மலரின் அருமையை அறியாது - அதை யானையின் தலைமீது வைந்தான். தலைவனைப் போலவே வெற்றியின் கர்வத்தில் யானையும் சிக்கி இருந்தது. தன் மீதிருந்த மலரை துதிக்கையால் எடுத்துக் கீழே போட்டது. காலால் நசுக்கியது! சிதைத்தது!

இதைக் கண்டதும் —

துருவாச முனிவர் சினம் கொண்டார்.

''பாண்டிய மன்னன் ஒருவனுல் உன் ஆட்சி அழியும்! உன் வெள்ளையானை — தன் தெய்வீகத் தன்மை இழந்து காட்டுயானையாக மாறும்! ''— என்று சாபம் தந்தார். அதன் பின்னர் தான் —

தன் தவறை உணர்ந்தான் இந்திரன். முனிவரின் கால்களில் விழுந்தான். மன்னிப்பு வேண்டினுன். மன்னிப்பது பெரியவர்களின் குணம். முனிவரும் மன்னித்தார். 'நூறு ஆண்டு காட்டில் திரிந்தபின் வெள்ளையானையின் சாபம் நீங்கும்! -' என்று விமோசனம் தந்தார்.

சாபத்தின் வேலை தொடங்கியது. வெள்ளையானை கருப்பு யானையாக மாறியது. காட்டில் அலைந்து திரிந்தது.

நூறு ஆண்டுகள் முடிந்து கொண்டிருந்தன. சாபம் நீங்கும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அச்சமயம்,

ஒருநாள் — அந்த யானை — கடம்பவனத்திற்குள் நுழைந்தது அங்கிருந்த பொற்றாமரைக் குளத்தைக் கண்டது. குளத்தையும் நீரையும் கண்டால் எந்த யானையும் விடாது. குஷி பிறந்துவிடும்.

குளத்தில் இறங்கியது யானை! குளிக்கத் தொடங்கியது! என்னே வியப்பு !

மட்டரகத் துணியை வாங்கித் தண்ணீரில் போட்டால்—சாயம் தனியே வந்து நீரில் மிதக்குமே—அதுபோல்.

யானையின் கருநிறம் மறைந்தது; வெண்மை படர்ந்தது, பழைய தெய்வீக ஒளிவீசத் தொடங்கியது. நீராடி வந்த வெள்ளை யானை அங்கிருந்த லிங்கத்தைப் பொற்றாமரைகளால் அர்ச்சித்து வழிபட்டது. சோமசுந்தரனின் அருள் பெற்றது. சாபம் நீங்கியது. தேவலோகம் சென்றது. மீண்டும் தேவேந்திரனின் யானையாகத் தெய்வீகப் பொலிவுடன் வாழ்ந்து வந்தது.

முதல்கதை—பொற்றாமரைக் குளம் தோன்றிய வரலாற்றையும் இரண்டாவது கதை பொற்றாமரைக் குளத்தின் சிறப்பையும் உணர்த்துகிறது. அடுத்த கதை கடம்பவனம் என்னும் பெயரில் மதுரை நகர் தோன்றிய வரலாற்றை உணர்த்தும்.

3. கடம்பவனம்

மதுரை தோன்றுவதற்குமுன், பாண்டிய மன்னன் 'மணவூர்' என்னும் ஊரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். அவ்வூரில் வாழ்ந்த வியாபாரிகளில் ஒருவன் தனஞ்செயன் என்பவன். இவன் சிறந்த சிவபக்தன்.

ஒருநாள், மேற்குத்திசையில் உள்ள பல ஊர்களுக்குச் சென்று வியாபாரம் செய்து திரும்பிக் கொண்டிருந்தான். அவன், கடம்பவனத்தை அடையும்போது இருட்டிவிட்டது. அச்சமயம்—

விண்ணில் இருந்து ஒளிமயமான விமானம் ஒன்று இறங்கி வருவதைப் பார்த்தான். அவ்விமானத்தில் சிவலிங்கமும் இருப்பதைக் கண்டான். பிரமிப்புடன் இறைவனை வணங்கினான்.

அன்று திங்கட்கிழமை. நடு இரவு. தேவர்கள் வந்தனர். நான்கு யாமங்களிலும் சொக்கலிங்க மூர்த்தியைப் பூஜை செய்தனர்.

மறுநாள்—
பொழுது விடிந்ததும்—

தேவர்களைக் காணவில்லை. விமானமும் சிவலிங்கமும் மட்டுமே இருந்ததைப் பார்த்தான். ஊர் திரும்பி பாண்டிய அரசனிடம் தான் கண்டவற்றைக் கூறினான். மகிழ்ச்சி அடைந்த குலசேகரப் பாண்டியன் அதே நினைவுடன் இரவில் உறங்கச்சென்றான்.

அரசனின் மூடிய இமைகளுக்கு இடையே கனவின் நிழல் படர்ந்தது. அக்கனவில், சித்தராக வந்த சிவபெருமான், "குலசேகரப் பாண்டியா! கடம்பவனக் காட்டைத் திருத்தி, அழகிய நகரத்தை உண்டாக்குக !"-என்று கட்டளையிட்டார்

தெய்வக் கட்டளையாயிற்று, வாளாவிருக்க முடியுமா? மறுநாளே அமைச்சர்களுடன் கடம்பவனக் காட்டிற்குச் சென்றான் குலசேகரப் பாண்டியன். பலநாள் பலரின் உழைப்பில் கடம்பவனக் காட்டை ஓர் அழகிய நகரமாக மாற்றி அமைத்தான். நகரம் பூர்த்தி ஆனதும் சாந்தி செய்ய விரும்பினான் அரசன். இதை அறிந்த சொக்கலிங்கக் கடவுள், தம் சடையில் உள்ள சந்திரனின் அமுதத்தைச் சிந்தினான். 'மதுரமயமான தன்மையால் மதுராநகர் எனப் பெயர்பெற்று நாளடை வில் 'மதுரை நகர்' என்று மருவிற்று.

4. தடாதகை அவதாரம்

பாண்டிய அரசன் மலயத்துவசன். இவன் சோழ மன்னனான சூரசேனனின் மகள் காஞ்சனமாலையை மணந்து கொண்டான். ஆண்டுகள் பல ஆகியும் குழந்தை பிறக்கவில்லை. அதனால் வேதனை அடைந்த அரசன் அசுவமேத யாகம் செய்யத் தொடங்கினான். 99 யாகங்களைச் செய்து விட்டான். இன்னும் ஒரு யாகத்தைச் செய்து முடித்துவிட்டால் இந்திர பதவியே அவனுக்குக் கிடைத்துவிடும்.

இந்திரனுக்கு பயம் வந்து விட்டது பதவி பறிபோவதை யார் தான் விரும்புவர் ? பாண்டியனிடம் வந்தான் இந்திரன். 'உனக்குக் குழந்தை வேண்டுமாயின் புத்திரகாமேஷ்டி யாகம் செய். உன் குறை தீரும்!' என்றான்.

மலையத்துவச பாண்டியனும் உடனே புத்திரகாமேஷ்டி யாகம் செய்யத் தொடங்கினான்.

மந்திரங்கள் விண்ணைப் பிளந்து ஒலித்தன. வேள்வித்தீ வானைத் தொட்டு சுடர்விட்டெழுந்தது. யாக குண்டத்தில் இருந்து அழகான குழந்தை தோன்றியது. அக்குழந்தை அரசி காஞ்சனமாலையின் மடிமீது வந்தமர்ந்தது. குழந்தையைப் பார்த்தான் அரசன். மூன்று தனங்கள் இருப்பதைக்கண்டு அதிர்ச்சி அடைந்தான்.

"கடவுளே! ஆண் வாரிசுக்காக யாகம் செய்தேன். நீ கொடுத்தது பெண் குழந்தை. அதுவும் மூன்று தனங்களுடன்! இதைக் கண்டு பகைவர்கள் கேலி செய்வார்களே, என் செய்வேன்!" என்று வருந்தினான். அப்போது -

''மலயத்துவசா ! மனம் கலங்காதே! மகளை, மகனைப் போலவே வளர்த்து முடிசூட்டு. தக்கக் கணவன் வரும்போது ஒரு தனம் மறைந்து விடும்!''- என்று அசரீரி ஒலித்தது,

அரசன் மகிழ்ந்தான், மக்கள் அனைவரும் களிப்படைந்தனர். விழா கொண்டாடினர். குழந்தைக்கு தடாதகை எனப் பெயர் இட்டனர்.

தடாதகை வளர்ந்தாள். சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தாள். வீராங்கனையாய்த் திகழ்ந்தாள். ஒரு நல்ல நாளில் தடாதகைக்கு முடிசூட்டு விழாவும் நடைபெற்றது. அதன் பிறகு, சில நாட்களில் மலயத்துவசன் சிவனடி சேர்ந்தான். பாண்டிய நாடு பெண்ணரசியின் நல்லாட்சியில் தழைத்தது. தடாதகை என்ற கன்னிப் பெண்ணால் ஆளப்பட்ட பாண்டியநாடு ''கன்னிநாடு'' எனப் பெயர் பெற்றது.

5. தடாதகையரின் திருமணம்

அன்னை காஞ்சனமாலை வருத்தத்தில் ஆழ்ந்தாள். ஒரு தாயின் வருத்தம் எதாக இருக்கும்? வயதாகிக்கொண்டிருக்கும் மகளுக்கு இன்னும் திருமணம் நடைபெறும் பேறு கிட்டவில்லையே!''- என்ற அன்னை வருத்தத்தை-ராணி தடாதகை பிராட்டி அறிந்தாள். தாய்க்கு ஆறுதல் கூறி, உலகனைத்தையும் வென்று, வெற்றிக்கொடி நாட்டப்படை திரட்டிப் புறப்பட்டாள்.

கயபதி, துரகபதி, நரபதி முதலிய வடநாட்டு அரசர்களை வென்றார். இந்திர உலகிற்குச் சென்றார். இந்திரன் ஓடி ஒளிந்தான். இறுதியாக, தடாதகை பிராட்டியார். கயிலை மலைக்கு வந்தார்.

கயிலை மலையில் போர் முழக்கம் எழுந்தது. பிராட்டியாரின் படையுடன் சிவக்கணங்கள் மோதின; என்றாலும் தோற்றன. நந்தித் தேவர், தான் அனுப்பிய படை தோற்றது கண்டு, சிவபெருமானிடம் ஓடினர். போர்க்களச் செய்தியைக் கூறினர். இறைவன் அறியாத நிகழ்ச்சிகளா?

''யாமே வருவோம்!'' என்று கூறி சமருக்குப் புறப்பட்டார், சங்கரனார்.

''எப்போருக்கும் சளைக்கமாட்டேன்! என்ற வீர சக்தி கோலத்தில் நின்றிருந்தார் தடாதகைப் பிராட்டியார்.

எதிரெதிரே நின்றனர் இருவரும் சிவபெருமான் பிராட்டியை நோக்க, பிராட்டி, ஐயனை நோக்கினர். பூர்வ பந்தம் பார்வையில்

கலந்தது. நாணம் பிராட்டியின் தலையைத் தாழ்த்தியது. அவளது மூன்றாவது தனம் மறைந்தது; சிலிர்த்தது.

அமைச்சர் சுமதி இவற்றைக் கவனித்தார். பழைய நினைவு வந்தது. பிராட்டிக்கும் நினைப்பூட்டினர். "இந்த அகிலாண்ட ஈஸ்வரனே தங்கள் மணாளன் !"- என்று உறுதிப்படுத்தினர். சிவ பெருமானும், "அடுத்த சோமவாரத்தில் உன்னை மணக்க வருவேன் இனி, நீ மதுரைக்குச் செல்!" என்றார்.

குறித்த நாளில் குறித்த நேரத்தில்-மதுரை மாநகர் தெய்வ லோகமாய் ஜொலிக்க - பொற்கலசத்தில் உள்ள புனித நீரினால் திருமால் சிவபெருமானது சிவந்த அடிகளை விளக்கினர். பிரமன் திருமணச் சடங்குகளை நிகழ்த்தினர். திருமங்கல நாணைப் பூட்டி பிராட்டியின் திருக்கரம் பற்றினர் சிவபெருமான்.

அன்று முதல் சிவபெருமானே - பாண்டியனாக மதுரையில் நல்லாட்சி நடத்தினர்.

6. வெள்ளியம்பலம்

திருமணம் முடிந்ததும் வந்திருந்தோரை விருந்து உண்ண அழைத்தார் தடாதகைப் பிராட்டி. அப்போது, பதஞ்சலி முனிவரும் வியாக்ரபாத முனிவரும், "இறைவா! பொன்னம்பலத்தில் ஆடி அருளிய திரு நடனத்தைத் தரிசித்த பிறகே நாங்கள் உணவு அருந்து வது வழக்கம்!- என்று சிவபெருமானிடம் முறையிட்டனர்.

"மதுரையிலேயே அந்நடனத்தை ஆடிக் காட்டுகிறோம்"- என்று அவர்கட்கு ஆறுதல் கூறி அருளினர் ஈசர்க்கீசனர்.

அனைவரும் கோவிலுக்குச் சென்றனர். அங்கே அற்புதம் நிகழ்ந்தது. வெள்ளியம்பலம் தோன்றியது. அங்கே.

முயலகன் மீது வலதுத் திருவடியை ஊன்றி சுந்தரச் சுடராய் நின்றார் சிவபெருமான். அம்மையார் மீது வைத்த திருநோக்கும் திரு நகையும் தோன்றத் திருநடனம் ஆடி அருளினர். அதைக் கண்டு, ஆனந்த பரவசமான பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாத முனிவரும் "எந்தையே இத்திருக்கூத்துடன் எப்போதும் வெள்ளியம்பலத்தே நின்று அனைவரின் பந்தபாசங்களைப் போக்கி அருள வேண்டும்!" என்று வேண்டினர். அவ்வாறே வரம் தந்தார்.

7. குண்டோதரனுக்கு அன்னம் இடுதல்

திருமணத்திற்கு வந்த அனைவரும் உணவு உண்டு முடிந்த பின்னும் சமைத்த உணவில் பெரும் பகுதி மீதமாகி இருந்தது. பிராட்டியார் இறைவனிடம் இதனைத் தெரிவித்தார். ‘குண்டோதரனின் ஆற்றலை உணர்த்த இதுவே வாய்ப்பு!’ — எனக் கருதினார் ஈசன். மறுகணம் — இறைவனின் திருவிளையாடல் தொடங்கியது. விளைவு —

குண்டோதரனின் வயிற்றில் வடவைத் தீ புகுந்தது. “பசியால் துடித்த அவன் இறைவனிடம் ஓடி வந்து; ”ஐயனே! பசி வருத்துகிறது! — என்று அலறினான்.

இறைவன் பிராட்டியை நோக்கினார். பிராட்டியார் குண்டோதரனை அழைத்துச் சென்று அன்னத்தின் முன் விட்டார் அவ்வளவு தான்! இமயமலை போல் குவிந்திருந்த சோறும் கறி வகைகளும் நொடியில் தீர்ந்தன. ஆனால் குண்டோதரனின் பசிதான் தீர்ந்த பாடில்லை! பாவம் குண்டோதரன்! மீண்டும் இறைவனிடம் ஓடிவந்து, கோரப் பசி” — என்று கூறித் துடித்தான்; அயர்ந்தான்;

8. அன்னக் குழியும் வைகையும்!

கருணையே வடிவான சோமசுந்தரக் கடவுள்—அன்னபூரணியை அழைத்தான். மறுகணம் — நிலத்தைக் கிழித்துக் கொண்டு குழிகள் தோன்றினார் போல் தயிர் அன்னம் பொங்கி எழுந்தது. வாரி வாரி உண்டான் குண்டோதரன். பசி தீர்ந்தது. மூச்சு முட்ட மலை போல் விழுந்து புரண்டான். தாங்க முடியாத தாகம் அவனை வாட்டியது. கிணறு, குளம், குட்டை என்று ஒன்று விடாமல் அனைத்திலும் உள்ள தண்ணீரைக் குடித்துத் தீர்த்தும் தாகம் தீரவில்லை. அது கண்ட சோமசுந்தரக் கடவுள் கங்கையை நோக்கினார்.

9 ஏழு கடல்

சோமசுந்தரக் கடவுள் சீரும் சிறப்புமாய் மதுரையை ஆண்டு வந்தார். அரசி காஞ்னமாலைக்கு கடலாடும் விருப்பம் உண்டாயிற்று. அதை தன் மகள் தடாதகையிடம் தெரிவித்தார். தடாதகை ஈசனிடம் கூறினார். இறைவன் கருணை கூர்ந்தார்.

“ஒரு கடல் என்ன? ஏழு கடல்களையும் இங்கே வரவழைக்கின்றேன்!”- என்றார். அவ்வாறே ஏழு கடல்களும் பெருமுழக்கத்துடன் மதுரைக்குள் நுழைந்தன. மக்கள் அஞ்சி நடுங்கினர். அது கண்ட இறைவன் ஏழு கடல்களையும் ஒரு குளத்திற்குள் அடக்கினார்.

10 மலயத்துவசனை அழைத்தல் !

கடலில் குளிக்க வந்தார் காஞ்சனமாலை. எழுகடல் குளக் கரையில் இருந்த முனிவர்களிடம், " கடலில் நீராட விதிகள் என்ன? என்று கேட்டார். அதற்கு அவர்கள், "கற்புக் கனலே, கணவனுடைய கை, மகனுடைய கை, பசுக்கன்றின் வால் — ஆகிய இம் மூன்றில் ஏதேனும் ஒற்றைக் கையில் பிடித்துக் கொண்டு கடலாட வேண்டும் என்பது சாஸ்திரம்! "என்றனர்.

காஞ்சனமாலையின் முகம் வாடியது !

'கணவனும் இல்லை, மகனும் பிறக்கவில்லை! கன்றின் வால்தானு எனக்குக் கதி!' — என்று வருந்தினர். மகளிடமும் முறையிட்டாள் பிராட்டி மூலம் செய்தி அறிந்த ஈசன், மாமியாரின் துயர்தீர, இந்திர லோகத்தில் — இந்திரனிற்கு நிகராய் வீற்றிருந்த மலயத்துவச பாண்டியனை தேவ விமானத்தில் வரவழைத்தார்.

மலயத்துவசனும் காஞ்சனமாலையும் கடலாடி முடித்ததும் இறைவன் திருவருளால் தெய்வ விமானத்தில் ஏறி விண்ணுலகு எய்தினர். பின்னர் —

தடாதகை பிராட்டி இறைவனிடம், " பாண்டிய மரபு அழியா திருக்கத் தாங்களே அரசராகி மதுரையை ஆள்கின்றீர். இம்மரபு தழைக்க மகன் வேண்டமா?" என்ருர்.

இறைவனும் திருவுளம் கொண்டார்.

11. உக்கிரப் பாண்டியன் அவதாரம்!

பிராட்டியார் கர்ப்பவதியானர். நன் நாளில் முருகனே அவதரித்தாற் போன்ற அழகு மைந்தனைப் பெற்றெடுத்தார். மக்களின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. வருணன், இந்திரன், மலையரசன் முதலானேர் கண்டதுமே அஞ்சும் தன்மை படைத்தத் தம் மகனுக்கு "உக்கிரவர்மன்" என்று பெயரிட்டார் ஈசனர்.

தக்க பருவத்தில் இறைவனின் ஆணைவழி வியாழ பகவானே குருவாக வாய்த்து உக்கிரவர்மனைச் சிறந்த கல்வியாளராக்கினர். எட்டு வயதிலே எல்லாக் கலைகளிலும் தேர்ந்தான். ஆண்டுகள் கழிய — தக்க பருவம் எய்தினன் உக்கிரவர்மன். இறைவனும் பிராட்டியும் மகனுக்கு மணமுடித்து முடி புனைய விரும்பினர்.

12. உக்கிர பாண்டியனுக்கு வேல் வளை செண்டு கொடுத்தல்

மணவூரை ஆண்டு வரும் சூரியகுல மன்னன் சோமசேகருக்கு ஒரு மகள், பெயர், காந்திமதி, முருகனுக்கேற்ற வள்ளி.

ஒரு நாள் சோமசேகரின் கனவில் சோமசுந்தரக் கடவுள் தோன்றி. உன் மகளுக்கு ஏற்ற கணவன் மதுரையில் இருக்கிறன்!, – என்று கூறி அருளினன். அமைச்சர்களிடம் தன் கனவை கூறி மதுரைக்குப் புறப்பட்டான் சோமசேகர்

நன்னளில் உக்கிர பாண்டியனுக்கும் காந்திமதிக்கும் விண்ணேரும் வியக்கும் வண்ணம் திருமணம் நடைபெற்றது.

சுந்தரபாண்டியர் ஒரு நாள் - தன் மகனை அழைத்து, 'மகனே, இந்திரனும், கடலரசனும் உனக்கு என்றுமே பகைவர். மேரு மலையும் கர்வம் கொண்டுள்ளது. எனவே, இந்திரன் முடி சிதற இந்த வளையை எறி! கடல் வற்ற இவ்வேலை விடு! மேரு மலையின் கர்வம் தவிடு பொடியாக இச்செண்டால் அடி!, என்று கூறி வளை, வேல், செண்டு ஆகிய முப்படைகளையும் உக்கிர பாண்டியரிடம் தந்தார். தொடர்ந்து-

உக்கிரபாண்டியனுக்கு முடி சூட்டினர். தாமும் தேவியும் கோவிலிற்குள் சென்று திருக்கொலு வீற்றி அருளினர்.

உக்கிர குமாரபாண்டியன் நாட்டை ஆண்டு வந்தான்

13. கடல் வற்ற வேல் எறிந்த கதை

உக்கிர குமார பாண்டியன் 96 அசுவமேத யாகங்கள் செய்து முடித்தான். இதனல் இந்திரன் பொருமை கொண்டான். 100 யாகங்களை முடித்தால் தன் பதவியே பறிபோய்விடுமே என்று அஞ்சினன். பாண்டிய நாட்டையே அழிக்கத் திட்டமிட்டான். கடல் அரசனை வருணனின் உதவியை நாடினன். ''ஊழிக்கால வெள்ளம் போல் சென்று மதுரையை அழித்து வா!, என்றன். பின் விளைவை அறியாத வருணன் இசைந்தான்.

கடல் பொங்கியது. பெரு முழக்கம் இட்டுப் பாய்ந்தது மதுரையை நோக்கி பேரிரைச்சலுடன் ஓடியது அது.

நள்ளிரவு !

தூங்கிக் கொண்டிருந்த பாண்டியனின் கனவில் இறைவன் தோன்றி எச்சரித்தார். கனவு கலைந்து எழுந்த உக்கிர பாண்டியன் அமைச்சர்களுடன் வந்து பார்த்தான். பேரொலியுடன் திரண்டு வரும் கடல் வெள்ளம் கண்டு வியந்தான். இறைவன் சித்த மூர்த்தியாய் நேரில் தோன்றி, ''தாமதிக்காமல் உன் வேற்படையை எறி!'' - என்று கட்டளையிட்டார். உடனே.

உக்கிரப்பாண்டியன் வேலை ஏந்தி, வலமாகச் சுழற்றி கடல் மேல் எறிந்தான். வேலின் நுனி பட்டதுமே கடல் வற்றியது. வலிமை இழந்தது. மதுரை மாநகரும் காக்கப்பட்டது

14. இந்திரன் முடி மேல் வளை எறிந்த கதை

சூரியன், செவ்வாய்க்கு முன் செல்ல சுக்கிரன் இவர்கள் பின்னே செல்வதால் சேர, சோழ, பாண்டிய நாடுகள் மழை இன்றிவறண்டன. பஞ்சம் தலை விரித்தாடியது.

மூவேந்தர்களும் அகத்திய முனிவரிடம் முறையிட்டனர். அவர், சோமவார விரதம் இருந்து இறைவனின் அருளால் இந்திரலோகம் சென்று இந்திரனிடம் வேண்டுங்கள்!,- என்றார்.

அவ்வாறே, மூவேந்தரும் விரதம் இருந்து, இந்திரனிடம் வந்தனர். இந்திரன் தன் சிங்காதனத்தைவிடத் தாழ்ந்த மூன்று சிங்காதனத்தை மூவேந்தரும் அமரத் தந்தான். சேரனும், சோழனும் அதில் அமர்ந்தனர். உக்கிர பாண்டியன் மட்டும் தேவேந்திரன் சிங்காதனத்தில் அவனுக்குச் சமமாய் அமர்ந்தான். அதனால் கோபம் கொண்ட தேவேந்திரன் சேர சோழ நாடுகளில் மட்டும் மழை பெய்ய அருளி அவ்விருவரையும் அனுப்பி வைத்தான்

பாண்டியநாடு மழை இன்றி வாடிக் கொண்டிருந்தது.

ஒருநாள் பாண்டியன் பொதிய மலைக்காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தான். அப்போது பொதிய மலை மீது புட்கலாவருந்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி எனும் நான்கு மேகங்கள் மேய்ந்து கொண்டிருந்ததைக் கண்டான். அவற்றை விலங்கிட்டுச் சிறைப்பிடித்தான் பாண்டியன்.

இதை அறிந்த தேவேந்திரன் பெரும்படை திரட்டி வந்தான். பாண்டியனுக்கும் தேவேந்திரனுக்கும் பெரும் போர் நடந்தது. பாண்டியன் வீசிய வளை - தேவேந்திரனின் வச்சிரப்படையை வீழ்த்தி முடியைக் கீழே தள்ளிச் சிதைத்தது. தோற்ற இந்திரன், 'உன் நாட்டில் மழை வளம் தருகிறேன்! மேகங்களை விட்டு விடு!'- என்று முறையிட்டான்.

மேகங்கள் விடுதலை பெற்றன. பாண்டிய நாட்டில் மழை பெய்தது. வளம் சுரந்தது. பொலிவு நிறைந்தது.

15. மேருவைச் செண்டால் அடித்த கதை

ஆண்டுகள் கடந்தன. மீண்டும் ஒரு முறை கிரகங்கள் தத்தம் நிலைதிரிந்தன. பிற கிரகங்கள் சூரியனை நோக்கி நின்றன. எனவே,

ஓராண்டு மழையே பெய்யாது என்னும் நிலை ஏற்பட்டு மதுரை நகர் பஞ்சத்தின் வசப்பட்டது துன்பம் கொண்ட உக்கிரபாண்டியன் இறைவனைத் தொழுது, அழுது வேண்டினார்.

இரவில், கனவில், சித்த மூர்த்தி வடிவில் வந்த இறைவன், "பாண்டியா! மேருமலையின் அருகில் உள்ள குகையில் ஏராளமான பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. நீ உன் செண்டால் அடித்து, மேருவின் கர்வத்தை அடக்கி, வேண்டிய பொருட்களை எடுத்துக்கொள். குகைக்கு "முத்திரையிட்டு மூடி விட்டு வா" — என்றார்.

அவ்வாறே பெரும் படையுடன் பல நாடுகளைக் கடந்து மேரு மலையை அடைந்தான் பாண்டியன். மலை அரசனை அழைத்தான். ஆனால் அவன் வரவில்லை. கோபம் கொண்டான் பாண்டியன். செண் டால் மேருவை அடித்தான். மலை அதிர்ந்தது; குலுங்கியது; ஆடியது; நொறுங்கியது; வெடித்தது.

செண்டால் அடிப்பட்டபின் மேருமலைத் தெய்வம், நான்கு தலைகளும், எட்டு தோள்களும் ஒரு வெண்கொற்றக்குடையுமாய் வெளி வந்து, பாண்டியனை வணங்கி நின்றது. "காமத்தின் வசப்பட்டுக் கிடந்தேன். காலம் தாழ்ந்தேன்! மன்னிப்பீர்!" —என்று வேண்டியது. பொருட்கள் இருந்த குகையை காட்டியது.

பாண்டியன் வேண்டிய அளவு வைரம், தங்கம் முதலான பொருட்களை எடுத்துக்கொண்டு தன் நாடு திரும்பினான். குடிமக்கட்கு வாரி வழங்கி, வறுமையை விரட்டினான். பல்லாண்டு நல்லாட்சி புரிந்து, தன் மகன் வீரபாண்டியனுக்கு முடிசூட்டிவிட்டு இறைவனின் திருவடி நிழலை அடைந்தான்.

16. வேதத்திற்கு பொருள் கூறல் :

ஊழிக்காலம் வந்தது. பதினான்கு உலகங்களும் அழிந்தன; அடங்கின. மீண்டும் சூரியன் முன்மலரும் தாமரைப்போல்சிவபெருமான் முன் உலகங்கள் உற்பத்தியாயின. தேவர்களும், திருமால், பிரமன் முதலானோரும் உதித்தனர். படைப்புத்தொழில் தொடங்கியது.

அரபத்தர் பெரும் முனிவர் அவரிடம் பிற முனிவர்கள் வந்து, "ஐயனே நாங்கள் வேதங்களைப் படித்தோம். அதனால் அதன் பொருள் அறியாதிருக்கின்றோம்!" - என்றனர். அதற்கு அரபத்தர் வேதத்தின் பொருளை வேத வித்தான சிவபெருமானே கூறவேண்டும். அதை அவரிடம் இருந்து கற்க உரிய இடம் மதுரையே. அங்கு செல்வீர்!" — என்றார்.

உடனே கண்ணுவர் முதலான முனிவர்கள் மதுரைக்கு வந்தனர். சோமசுந்தரனை வழிபட்டு கல்லால மரத்தினடியில் வீற்றிருக்கும் தட்சிணாமூர்த்தியை பணிந்தனர். இறைவனின் கருணை வெளிப்பட்டது. பதினாறு வயது அந்தணக் குரு வடிவத்தில் இறைவன் வெளிப்பட்டார். வேதத்தின் உட்பொருளை விரிவாய் உபதேசித்தார். கண்ணுவர் முதலான முனிவர்களின் முதுகுகளில் தம் அருளாகிய திருக்கரத்தால் தடவிக்கொடுத்தார். பின் சிவலிங்கத்தினுள் ஐக்கியம் ஆனார்.

17. மாணிக்கம் விற்ற கதை

வீரபாண்டியனுக்குக் காமக்கிழத்தியர் பலர் இருந்தனர். அவர்கள் மூலம் பல குழந்தைகளைப் பெற்றான். ஆனால் பட்டத்தரசி மூலம் குழந்தை பேறே கிட்டவில்லை. கடவுளை வேண்டினான். தவம் இருந்தான். இறைவனின் அருளால் பட்டத்தரசி அழகிய ஆண் மகனைப் பெற்றாள்.

குழந்தை பிறந்த சில நாட்களிலேயே வேட்டையாடச் சென்ற வீரபாண்டியன் புலிக்கு இரையாகி பொன்னாடு போந்தான். அரசியும், காமக்கிழத்தியரும் மக்களும் துயருற்றனர். கிடைத்த பொன்னாபரணங்களையும், மகுடத்தையும் காமக்கிழத்தியரின் மக்கள் அபகரித்து கொண்டு ஓடிவிட்டனர்.

இளவரசனுக்கு முடிசூட்ட வேண்டி பொக்கிஷத்தை திறந்தனர் முடியைக் காணவில்லை. முடி இன்றி முடி சூட்டுவது எப்படி? புதிதாய் முடி செய்ய உயர்ந்த மாணிக்கங்கள் வேண்டுமே ! எங்கே போவது?

கலங்கிய அமைச்சர்கள் இளவரசனுடன் கோவிலுக்குச் சென்றனர்.

சோமசுந்தரனை வணங்கி வழிகேட்டனர். அவ்வமயம் இறைவன் வணிக வேடம் பூண்டு வந்தார். என்னிடம் உயர்ந்த நவரத்தினங்கள் உள்ளன! " — என்று கூறி அவற்றைக் காட்டினார். ' இவை வலன் என்ற அசுரனின் உடல் உறுப்புக்கள்!'' — என்றார். திகைத்தனர் அமைச்சர்கள்.

" அரக்கன் நவரத்தினங்களாக மாறியது எப்படி?" என்று கேட்டனர். வணிகன் அந்தக் கதையைச் சொன்னான்.

வலன் என்ற அரக்கன் தவம் செய்து சிவபெருமானிடம் இருந்து வரம் பெற்றான் அவ்வரத்தின்படி அவனைக் கொல்ல யாராலும் முடியாது. ஒருவேளை அவன் இறந்தால் அவனது உறுப்புக்கள் நவரத்தினங்களாக மாறும்!"

வரம் பெற்ற வலன், இந்திரனுடன் போருக்குச் சென்று வென்றான். சூழ்ச்சியால் வலனைக் கொல்லக் கருதிய இந்திரன் அவனிடம் வரம் வேண்டினான். தர இசைந்து 'என்ன வேண்டும்'!- என்று கேட்டான். நான் செய்ய இருக்கும் யாகத்திற்கு நீ யாகப் பசுவாக வரவேண்டும்!'—என்று வேண்டினான் இந்திரன்.

கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வலன் பசுவானான். யாகத்தில் கொல்லப்பட்டான். அவனது உறுப்புகள் நவரத்தினங்களாயின. இவற்றைக் கொண்டு முடி தயாரித்து முடிசூட்டு விழா நடத்து!'- என்று கூறிய வணிகன் மறைந்தான்.

'வந்தவன் மனிதனல்லன் தெய்வமே!'— என்றறிந்த அமைச்சர்கள் மகிழ்ந்தனர். முடி தயார் ஆயிற்று. முடிசூட்டு விழா நடந்தது. பாண்டியன்-அபிஷேகப் பாண்டியன் என்னும் பெயருடன் சிறப்பாய் நாட்டை ஆண்டு வந்தான்.

18. வருணன் விட்ட கடலை வற்றச் செய்த கதை

அபிஷேகப் பாண்டியன் சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில் சிவபூஜை செய்வது வழக்கம். பாண்டியனின் பூஜை முடிந்த பின் தான் இந்திரன் பூஜை செய்ய முடியும் (இப் பூஜையை இந்திரன் செய்யத் தொடங்கிய விவரம் முதல் திருவிளையாடலில் உள்ளது).

அன்று பாண்டியனின் பூஜை முடிய அதிக நேரம் ஆகிவிட்டதால், அதன் பின் தன் பூஜையை முடித்துத் தன் பொன் உலகு திரும்பினான் இந்திரன். இதை அறிந்த வருணன், மதுரையில் உள்ள சொக்கலிங்கம் தான் மற்ற லிங்கங்களில் பெரிதோ?' என்று கேட்க அதன் பெருமைகளை இந்திரன் கூறினான் இதனைச் சோதித்தறிய முடிவு செய்து கொண்டான் வருணன்.

'மதுரையை அழி'—என்று கடலிற்குக் கட்டளை இட்டான். கடல் பொங்கிப் பாய்ந்தது. உலகமே நடுங்கியது. பிரம்மகற்பத்திலும் அழியாது இருந்த மதுரைக்கு இன்று அழிவு வந்ததோ என்று அஞ்சினர். பாண்டியன் பயந்து இறைவனைச் சரணடைந்தான்.

பாண்டியன் முன் தோன்றினார் சிவபெருமான். புன்னகை புரிந்தார். அபயம் தந்தார். தன் திருச்சபையில் உள்ள நான்கு மேகங்களை அழைத்து, 'மதுரையை அழிக்க வரும் கடலை வற்றுமாறு விரைந்து சென்று பருகுங்கள்!'—என்று ஆணையிட்டார்.

உடனே நான்கு மேகங்களும் நிமிர்ந்து முழங்கி கடல் நீரை உறிஞ்சின.

கடல் வற்றியது. வரண்டது. மதுரை நகர் காக்கப்பட்டது. சொக்கலிங்கத்தின் பெருமையையும், திருவிளையாடலையும் உணர்ந்தான் வருணன்.

— மதுரைக் காண்டம் முற்றும் —

19. நான் மாடக் கூடலான வரலாறு

மதுரையை அழிக்கத்தான் மேற்கொண்ட முயற்சி தோல்வி அடைந்ததால்-வருணன் கோபம் கொண்டான். இது, சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல் என்பதை அவன் உணரவில்லை. ஏழு மேகங்களையும் அழைத்தான். உலகில் உள்ள எல்லாக்கடல் நீர்களையும் குடித்து, மதுரையில் பேய் மழையாய்ப் பொழிந்து அந்நகரையே அழித்து வருமாறு'— கட்டளையிட்டான்.

வருணனின் கட்டளையை மேகங்கள் நிறைவேற்றின. கடல்கள் அனைத்தும் வற்றுமாறு நீர் பருகி, உடல் கருத்து மதுரை நகரை மேகங்கள் முற்றுகை இட்டன இடி முழக்கமிட்டன.

அபிஷேகப் பாண்டியனும் நகர மக்களும் பயந்து நடுங்கினர். சோமசுந்தரக் கடவுளிடம் ஓடினர். திருவடி தொழுது முறையிட்டனர். இறைவனும் தம் முடி மீதுள்ள நான்கு மேகங்களையும் அழைத்தார். 'நீங்கள் நால்வரும் நான்கு திசைகளிலும் நான்கு மாடங்களாய் நின்று ஏழு மேகங்களையும் விலக்குவீர்!' என ஆணையிட்டார்.

இறைவனின் ஆணைவழி நான்கு மேகங்களும் மதுரையைச் சூழ்ந்து, வளைத்துக் காத்து நின்றன. அவற்றின் மீது விழுந்த மழைத்துளிகள் உடைந்து சிதறின

வருண தேவன் வெட்கமுற்றான். இதனை சிவனாரின் திருவிளையாடல் என்பதை உணர்ந்தான். பொற்றாமரைக் குளத்திற்கு வந்தான். குளத்தை நெருங்கியதுமே நெடுநாட்கள் அவனை வாட்டிக் கொண்டிருந்த வயிற்றுவலி நீங்கியது. குளத்தில் நீராடி சோமசுந்தரக் கடவுளைத் தொழுது தன் அறியாமையாற் செய்த பிழையை மன்னிக்குமாறு வேண்டினான்.

வருணனின் மேகங்களைத் தடுப்பதற்காகச் சிவனார் அனுப்பிய நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாய் கூடி நின்றமையால் மதுரை நகர் நான்மாடக்கூடல் என்னும் பெயரையும் பெற்றது

20. எல்லாம் வல்ல சித்தர்

மக்களைக் கடைத்தேற்றத் திருவுளம் கொண்டார் சோமசுந்தரக் கடவுள். திருவிளையாடல் தொடர்ந்தது சித்தர் வேடம் பூண்டார்

நகர் முழுவதும் சுற்றிப் பல சித்து வேலைகளைச் செய்தார். தூரத்தில் இருந்த மலையை அருகில் ஓடி வரச் செய்தார். கிழவனை இளைஞனாக்கினார். இரவில் சூரியனை உதிக்கச் செய்தார். இப்படிப் பல,

காவலர் மூலம் செய்தி அறிந்த அபிஷேகப் பாண்டியன் சித்தரை அழைத்து வருமாறு கட்டளை இட்டார். சித்தர் வர மறுத்தார். செய்தி அறிந்த பாண்டியன் பேசாது விட்டு விட்டார்.

21 கல் யானை கரும்பு அருந்திய வரலாறு

தைத்திங்கள் முதல் நாள் — சங்கராந்தி தினம்.

கோவிலுக்கு வந்தான் அபிஷேகப் பாண்டியன். இறைவனை வணங்கிவிட்டுக் கோவிலை வலம் வரும்போது—

சித்தர் வழியில் அமர்ந்திருந்தார். நீ யார்?'' என்று கேட்டப் பாண்டியனுக்குத் தம் பெருமைகளைக் கூறினார் சித்தர்.

சிரித்தான் பாண்டியன். தற்பெருமை என்று கருதினான். அச் சமயம் வேளாளன் ஒருவன் செழித்து வளர்ந்த கரும்பு ஒன்றைக் கொண்டு வந்து மன்னரிடம் தந்து வணக்கினான். அதைப் பெற்ற அரசன் சித்தரைச் சோதிக்க விரும்பினான்.

இந்தக் கரும்பை இங்குள்ள கல் யானை உண்ணுமாறு செய்வீரா?— என்று கேட்டான். 'இதோ' என்று கூறிய சித்தர் அங்கிருந்த கல்லில் செதுக்கிய யானையின் சிற்பத்தை நோக்கினார். நோக்கிய கணமே-

கல் யானை அசைந்தது. பிளிறியது. துதிக்கையை நீட்டியது. அரசனிடம் இருந்த கரும்பைப் பற்றி வாயில் இட்டுச் சாறு வழிய உண்டது. சித்தர் மீண்டும் கல் யானையின் மீது கடைக்கண் பார்வையைச் செலுத்தினார். யானை துதிக்கையால் அரசரின் கழுத்தில் இருந்த முத்து மாலையைப் பற்றி இழுத்து வாயில் போட்டுக் கொண்டது.

கோபம் கொண்ட அரசரின் மெய்காவலர் சித்தரை அடிக்கக் கை ஓங்கினர். 'நில்!' என்று குரல் கொடுத்தார் சித்தர். காவலர் நின்றனர் சிலைகளாய்!

பாண்டியன் அறியாமை நீங்கியவனாய் சித்தரைப் பணிந்து மன்னிப்பு வேண்டினான். 'வேண்டும் வரம் கேள்!' என்றார் சித்தர். புத்திர பாக்கியம் வேண்டினார் மன்னர். சித்தர் அருளினார். யானையின் மீது கை வைத்தார். உடனே யானை தான் விழுங்கிய

முத்து மாலையைக் கக்கி, துதிக்கையால் பாண்டியனிடம் நீட்டியது. அவன் அதைப் பெற்றதும் யானை கற்சிலையாய் மாறிற்று. சித்தரும் மறைந்தார். இறைவனின் திருவிளையாடலை உணர்ந்தான். பின்-

சித்தரின் அருளால் பாண்டியனுக்கு மகன் பிறந்தான். குழந்தைக்கு 'விக்கிரமன்' எனப் பெயரிட்டு தக்கப் பருவத்தில் முடி சூட்டி இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்தான்.

22. யானை எய்த வரலாறு

மதுரை நகரை விக்கிரமப் பாண்டியன் ஆண்டு வந்தபோது, காஞ்சி நகரைச் சோழன் ஆண்டு வந்தான். சமண மதத்தைச் சார்ந்த இச்சோழன் விக்கிரமன் மீது பகை கொண்டவன். நேருக்குநேர் நின்று எதிர்க்கும் துணிவற்றவன். சூழ்ச்சியால் விக்கிரமனைக்கொல்லக் கருதினான். எட்டு மலைகளில் வாழ்ந்து வந்த சமண முனிவர்களுக்குத் தனித்தனியே ஓலை அனுப்பி வரவழைத்தான். எண்ணாயிரம் சமண முனிவர்கள் காஞ்சி நகர் வந்து கூடினர். அவர்களிடம் 'அபிசார யாகம்' செய்து விக்கிரமனைக் கொல்லுமாறு வேண்டினான்.

சமணர்களும் அக் கொடிய யாகத்தை இயற்றினர். வேள்வித் தீயிலிருந்து மிகப் பெரிய கொடிய யானை ஒன்று வெளிப்பட்டது.

விக்கிரமப் பாண்டியனை மதுரை நகருடன் அழித்து விட்டு வா!'— என்று சமண முனிவர்கள் ஆணையிட்டனர்.

யானை சினத்துடன்—வடவை தீ நடந்து வருவது போல் நிலம் அதிர மதுரையை நோக்கி நடந்தது. சோழப்படையும் சமண முனிவர்களும் யானையைத் தொடர்ந்தன.

யானையின் வருகையை அறிந்து அஞ்சிய விக்கிரமன் சோம சுந்தரக்கடவுளைத் தஞ்சம் அடைந்தான். அப்போது —

'பாண்டியனே! அக்கொடிய யானையை நான் அழிக்கிறேன்! அதற்கு முன் நகரின் அருகே-கிழக்கே-ஒரு அட்டாலை மண்டபத்தை உடனே கட்டி முடி,'—என்ற அசரீரி கேட்டது.

மகிழ்ந்தான் மன்னன். விரைந்து பதினாறு தூண்களுடன் அட்டாலை மண்டபத்தை உண்டாக்கினான். இறைவன் - அழகிய வேடன் வேடத்தில் தோன்றினார். மிகப் பெரிய வில்லும் — ஆற்றல் மிகுந்த 'நரசிங்கக்கணை'; என்ற அம்புமாய் மண்டபத்தின் மீது ஏறினார்.

யானை வந்தது; பயங்கரமாய் உலகதிரப் பிளிறியது.

வில் வளைந்தது; அம்பு பாய்ந்தது; மலையே சாய்ந்தாற் போல் - உலகமே வெடித்தாற் போன்ற ஓசையுடன் தரையில் வீழ்ந்து இறந்தது யானை. யானையின் கதி கண்ட சோழப்படையும் சமணமுனிவரும் அஞ்சி, அலறி, சிதைந்து ஓடினர்.

மகிழ்ந்த பாண்டியன், இறைவனின் திருவடிகளைப் பற்றி, "இறைவா! நீர் இங்கேயே 'வீற்றிருந்து எம்மைக் காக்கவேண்டும்!'- என்று வேண்டினன். இறைவனும் இசைந்தான்.

விக்கிரமப் பாண்டியனுக்கு ஓர் அழகிய ஆண்மகன் பிறந்தான். அக்குழந்தை இராஜசேகரன் என்னும் பெயரில் வளர்ந்து வரலாயிற்று.

23. விருத்த குமார பாலரான வரலாறு:

விக்கிரமப் பாண்டியனின் ஆட்சியில் —

விருபாக்கன், சுபவிரதை என்ற அந்தணத் தம்பதிகளுக்கு கௌரி என்ற தெய்வீக் குழந்தை பிறந்து வளர்ந்து வந்தது. சிறு வயதிலேயே கௌரி பராசக்தியின் மந்திரத்தைக் கற்று ஜெபித்து வந்தாள். ஒரு நாள் —

வைணவப் பிரம்மாச்சாரி ஒருவன் பிச்சை கேட்டு விருபாக்கனின் வீட்டிற்கு வந்தான். விதி விளையாடத் தொடங்கி விட்டது. பிச்சை கேட்டு வந்தவனின் குலம், கோத்திரம், குடி பிறப்பு பாராது தன்மகளை அவனுக்குத் தர விரும்பி மந்திரத்துடன் தாரை வார்த்தான். மகளை மணமுடித்துத் தந்து சீர் சிறப்புடன் அனுப்பிவைத்தான்.

பிரம்மாச்சாரியின் பெற்றோர் வைணவர். சைவசமயத்தவளான மருமகளை வெறுத்தனர். ஒருநாள் அவர்கள் வெளியூர் செல்லும் போது கௌரியை வீட்டில் விட்டுப் பூட்டி விட்டுச் சென்றனர். சிவ தரிசனத்திற்கு ஏங்கி, சிவ சிந்தனையுடன் தனியே இருந்தாள் கௌரி. அப்போது —

சோமசுந்தரக் கடவுள் வயோதிக வேடம் பூண்டு கௌரியின் வீட்டினுள் நுழைந்தார். சிவனடியாரை வரவேற்றாள் கௌரி. உணவு கேட்டார் சிவனடியார். வீடு பூட்டி இருப்பதைக் கூறினாள் கௌரி. பூட்டை நீ "தொட்டால் திறந்து கொள்ளும்!" என்றார் சிவனடியார். அவ்வாறே சமயலறை பூட்டு திறந்து கொண்டது. நொடியில் அறுசுவை உணவு சமைத்து விருந்திட்டாள் கௌரி.

உணவு சமைத்து முடிந்ததும் வயோதிகர் இளைஞனாக மாறினார்! கற்புக்கரசியான கௌரி அது கண்டு நடுங்கினாள் அச்சமயம் —

வெளியூர் சென்ற மாமனும் மாமியும் திரும்பி வந்தனர். அக்கணமே - இளைஞன் பச்சைக் குழந்தையாக மாறித் தரையில் தவழ்ந்தது. குழந்தையைக் கண்ட மாமி, "இது ஏது?" - என்ருள். "தேவதத்தன் தன் மனைவியுடன் வந்து சிறிது நேரம் பார்த்துக் கொள்ளுமாறு விட்டுச் சென்ருன்!" என்று கூறிஞள் கௌரி. சைவக் குழந்தை என்று அறிந்ததும் மாமி சீறிஞள். குழந்தையுடன் கௌரியை வீட்டை விட்டே விரட்டினுள்.

தெருவிற்கு வந்த கௌரி திகைத்தாள். இறைவனைத் தியானித்தாள். அக்கணமே ஆகாயத்தில் ரிஷப வாகனத்தில் உமாதேவியுடன் காட்சி அளித்தார் சோமசுந்தரக்கடவுள். அவரது அருட்கருணையால் கௌரி உமாதேவியுடன் இரண்டறக் கலந்தாள். இக்காட்சியைக் கண்டவர்கள் மெய் மறந்தனர்.

24. கால் மாறி ஆடிய வரலாறு:

விக்கிரமப்பாண்டியனின் மகன் இராஜசேகரன் அரசனுஞன். அவன் பரதக் கலையைக் கற்கும் போது தமக்குச் சோர்வு ஏற்படுவது கண்டு அம்பலத்தில் ஆடும் இறைவனுக்கும் இவ்வாறு தானே சோர்வு ஏற்படும்? என்று எண்ணினுன். ஆனுலும் திருக்கூத்தை நிறுத்த முடியுமா? நீண்ட சிந்தனைக்குப்பின் ஒரு முடிவிற்கு வந்தான்.

சிவராத்திரி அன்று கோவிலுக்குச் சென்ருன் நான்கு யாமப் பூசை முடிந்தது. இறைவனைத் தொழுத பாண்டியன், "இறைவா! ஊன்றிய திருவடியை மேலே எடுத்து வீசி தூக்கிய திருவடியை நிலத்தில் ஊன்றி கால் மாறி ஆடவேண்டும். இல்லையேல் நான் இங்கேயே இப்போதே உயிரை மாய்த்துக் கொள்வேன்!" — என வேண்டினுன். இறைவனும் கால் மாறி ஆடினுர். பாண்டியனின் விருப்பப்படி இன்றும் மதுரையில் வெள்ளியம்பலத்தில் கால்மாறி ஆடும் திருக்காட்சி நல்குகிருர்.

25. பழி அஞ்சின வரலாறு

இராஜசேகரின் மகன் குலோத்துங்கன் மதுரையை ஆண்டுவந்த போது —

அந்தணன் ஒருவன் திருப்பத்தூரில் இருந்து தன்மனைவியையும் கைக் குழந்தையையும் அழைத்துக் கொண்டு மதுரையில் உள்ள மாமனர் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தான். வழியில் காட்டில் — மரத்தடியில் மனைவியையும் குழந்தையையும் விட்டு விட்டு நீர் தேடிச் சென்ருன். சென்றவன் தண்ணீருடன் திரும்பி

வரும் போது அம்பு பாய்ந்து இறந்து கிடக்கும் மனைவியையும் அருகில் வில்லும் கையுமாய் நிற்கும் வேடனையும் கண்டு அவனே தன் மனைவியைக் கொன்றவன் என்று முடிவு செய்தான். வேடனை அழைத்து மதுரைக்கு வந்தான். குலோத்துங்க பாண்டியனிடம் முறையிட்டான். வேடனோ —

"தான் ஏதும் அறியாத நிரபராதி"—என்று உறுதியாகக் கூறினான். தீர்ப்பைச் சில தினங்கட்குத் தள்ளி வைத்த பாண்டியன் வேடனைச் சிறையில் இட்டான் சோமசுந்தரக் கடவுளை தரிசித்து "நீ தான் தீர்ப்பு கூற வழி காட்ட வேண்டும்!" என்று பிரார்த்தித்துக் கொண்டான். அக்கணமே —

"பாண்டியா ! செட்டித் தெருவில் நடை பெறும் திருமணத்திற்கு அந்தணனுடன் வா. அங்கே உண்மைகள் புரியும்!" — என்ற வான் ஒலி எழுந்தது. அவ்வாறே —

திருமணத்திற்குச் சென்றனர். அங்கே இறைவனின் திருவருளால் எமதூதர்கள் இவர்கள் கண்ணில் பட்டனர். அவர்களது உரையாடல் இவர்களது செவிக்கும் எட்டியது.

'எந்நோயும் இல்லாத இம்மணமகளின் உயிரை எக்காரணத்தை முன் வைத்து நாம் கவர முடியும்?" என்று கேட்ட ஓர் எமதூதனுக்கு அடுத்தவன் கூறிய பதில் ...

நேற்று — காட்டில் ஆலமரத்தின் இலையில் முன்பே சிக்கி இருந்த அம்பை காற்று வீசச்செய்து, வீழ்த்தி பார்ப்பினியின் நெஞ்சில் பாய வைத்து அவளது உயிரை அபகரிக்கவில்லையா? அது போல் ஏதேனும் தந்திரம் செய்வோம்! அதோ! மாட்டுக் கொட்டடியில் உள்ள பசு வெகுண்டு வந்து மணமகளைக் குத்திக் கொல்லச் செய்வோம்!'

இவ்வுரையாடலைக் கேட்ட பாண்டியன் அந்தணனைப் பார்த்தான். உண்மை அறிந்த அந்தணன் தலை தாழ்த்திக் கொண்டான். சிறிது நேரத்தில் —திருமண ஓசைகளால் மருண்டு ஓடி வந்த பசு எதிரே அமர்ந்திருந்த மணமகளை முட்டிக் கொல்வதையும் கண்டனர்.

அரண்மனை மீண்ட அரசன் அந்தணனுக்கு வேண்டும் பொருட்களைக் கொடுத்தான். சிறையில் இருந்த வேடனை விடுவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு நிரம்ப பொருள் தந்து இருவரையும் வழி அனுப்பி வைத்தான்.

26. மா பாதகம் தீர்த்த வரலாறு

அவந்தி நகரில் வாழ்ந்த அந்தணனின் மனைவி அழகி. என்ருலும் ஒழுக்கமற்ற பாவி. அவரது மகனும் எதற்கும் அஞ்சாத கொடியவன், காமுகன். தாயைப் பெண்டாளத் தொடங்கிய சண்டாளன். இச்செயலை அந்தணன் அறிந்தான். தந்தைக்கும் தன் செயல் தெரிந்து விட்டதை அறிந்ததும் மண் வெட்டியால் தந்தையை வெட்டிக் கொன்ருன். பெரும் பொருளுடன் தாயையும் அழைத்துக் கொண்டு வேற்றூருக்குப் பயணமானுன்.

வழியில் — காட்டில் — கள்வர்கள் எதிர்பட்டனர். அவனிடம் இருந்த செல்வத்தையும் தாயையும் அபகரித்து கொண்டு சென்றனர்.

பாவத்தின் மொத்த உருவமான அவனை—இறந்த அவனது தந்தையின் ஆவி பற்றிக்கொண்டது. நெடுங்காலம் ஆவி பிடித்துப் பைத்தியமாய் அலைந்து இறுதியில் மதுரை வந்து சேர்ந்தான்.

குற்றத்தையும் குணமாய்க் கொண்டருளும் சோமசுந்தரக் கடவுளும் அங்கயற்கண்ணி அம்மையும் வேடுவத் தம்பதிகளின் வேடத்தில் வந்து அக்கொடியவனை ஆட்கொண்டனர். பாவம் நீங்கிய அவன் பழைய நினைவுகள் வரப் பெற்ருன். தன்னை ஆட்கொண்டு மாபாதகம் தீர்த்த இறைவனைத் தொழுது சிவனடியார்கட்குச் சேவை செய்தே தன் மீதமுள்ள நாட்களையும் கழித்தான்.

27. அங்கம் வெட்டின வரலாறு

வாள் வித்தையில் வல்ல வேற்று நாட்டு முதியவன் தன் இளம் மனைவியுடன் மதுரையில் வந்து குடியேறினுன். இளைஞர் பலர் அவரிடம் வாட்போர் பயின்றனர். அவருள் ஒருவனுன சித்தன் குருவுக்கு மிஞ்சிய சிஷ்யனுனுன். ஆசிரியருக்கு எதிராக அவனும் ஒரு சிலம்பக் கூடம் அமைத்தான். அத்துடன் குருபத்தினி மீது இச்சைக் கொண்டு — அவளைக் கெடுக்க முயன்ருன். கற்புக் கரசியான அப்பதிவிரதை சோமசுந்தரக் கடவுளை தஞ்சமடைந்தாள்.

இறைவனும் ஆசிரியரின் உருவம் தாங்கி வந்து சித்தனை வாட்போருக்கு அழைத்தான். நகருக்கு வெளியே இருவருக்கும் கடுமையான வாட்போர் நடந்தது. இறுதியில் ஆசிரியர் வேடந் தாங்கிய இறைவன் சித்தனின் நாக்கு, கண், கை என்று ஒவ்வொரு அங்கமாகத் தன் வாளால் வெட்டி அந்நீசனைக்கொன்று கற்பரசியைக் காத்தருளினுர். இறைவனின் இந்திருவிளையாடலை அறிந்த முதிய ஆசிரியர் பக்திப் பெருக்கில் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

28. நாகம் எய்த வரலாறு

குலோத்துங்க பாண்டியனின் மகன் அனந்தகுண பாண்டியனின் காலத்தில் பாண்டிய நாடு சிவபெருமானின் திருவேடம் போல் திகழ்ந்தது. இதனால் பொறாமை கொண்ட சமண முனிவர் எண்ணாயிரவரும் ஒன்று கூடி பாண்டியனை அழிக்க வேள்வி இயற்றினர். அவ் வேள்வித் தீயில் கொடிய அரக்கன் தோன்றினான். அவனிடம் "பாண்டியனையும் மதுரையையும் விழுங்கிவிட்டு வருமாறு" ஆணை இட்டனர். அவ்வரக்கன் தேவர்களும், நவக்கிரகங்களும் அஞ்சும் கொடிய பாம்பின் உருவம் தாங்கி மதுரை நகரின் மேற்குத் திசை நோக்கிப் புறப்பட்டான்.

உலகத்தையே விழுங்கி விடுவது போல் தன் பெரிய வாயைத் திறந்து கொண்டும் விஷ மூச்சு விட்டுக் கொண்டும் வரும் பாம்பைக் கண்டு அஞ்சிய மக்கள் மன்னரிடம் முறையிட்டனர். சோமசுந்தரக் கடவுளைத் தொழுது, அவனது கருணைத் துணையுடன் தனியனாய் வில்லும் அம்புமாய்ப் புறப்பட்டான் பாண்டியன். கொடிய அம்பை விட்டுப் பாம்பைக் கொன்றான். துடித்து விழுந்த பாம்பு இறக்கும் போது கொடிய ஆலகால விஷம் போன்ற நஞ்சினைக் கக்கியது. விஷம் நகர் முழுவதும் பரவி மக்கள் அனைவரும் உடல் கம்பித்து உயிர் ஊசலாட மயங்கினர். இது கண்டு அஞ்சிய பாண்டியன் இறைவனிடம் முறையிட்டான். கருணாகரனான அவன் தனது திருமுடி மீது அமர்ந்துள்ள சந்திரன் அமுதங்களில் ஒரு துளியை மதுரை நகர்மீது சிந்தச் செய்தான். அமுதம் விஷத்தின் வலிமையை ஒடுக்கி நகரைத் தூய்மை ஆக்கியது. மக்கள் பழைய நிலை பெற்று எழுந்தனர்.

29. மாயப் பசுவை வைத்த வரலாறு :

தங்கள் தோல்வியால் சமண முனிவர்கள் சோர்ந்து விடவில்லை! சைவர்கள் பசுவைக் கொல்லமாட்டார்கள் என்ற முடிவில்மீண்டும் யாகம் செய்தார்கள். யாகத்தில் பசு வடிவத்துடன் மதுரையை அழிக்க அவனை அனுப்பினர்.

பயங்கர வடிவுடைய மாய அரக்கப் பசு மலைகள் அதிர, மதுரையை நோக்கி ஓடிவந்தது. செய்தி அறிந்த பாண்டியன் இறைவனிடம் முறையிட்டான். சோமசுந்தரக் கடவுள் நந்தித் தேவனை அழைத்து "சமணர்களின் கொடிய பசுவை வென்று வா!"—என்று ஆணையிட்டார்.

நந்தித்தேவன் கூற்றுவனைப் போல் பாய்ந்தோடியது மாயப் பசுவிற்கும் நந்திக்கும் கடுமையான போர் நெடு நேரம் நடந்தது. என்றாலும் பசுவைக் கொல்ல நந்திக்கு மனம் இல்லை. எனவே நந்தி தனது பேரழகைக் காட்டியது. மாயப் பசு அதன்மீது காமம் கொண்டது. அதன் இச்சை மிகவே உயிருடன் வீரியத்தையும விட்டு கீழே விழுந்தது. உடனே அதன் உடல் மலை ஆயிற்று

இந்த நிகழ்ச்சியின் சான்றாக நந்தித்தேவர் தன் உடலை பசுமலையாக அங்கே விட்டு தன் ஆக்கும் சரீரத்துடன் இறைவனைச் சென்றடைந்தது.

30. மெய் காட்டிய வரலாறு :

அனந்தகுண பாண்டியனின் மகன் குலபூஷண பாண்டியன் மதுரையை அரசாண்டு வந்த போது —

சேதிராயன் என்னும் வேடர் தலைவர் பெரும் படையுடன் திகழ்ந்தான். அவன் பாண்டியனுடன் போர் புரியத் திட்டமிட்டிருந்தான். இதை அறிந்த குலபூஷணன், தளபதி சௌந்தர சாமந்தனை அழைத்து ''பொக்கிஷத்திலிருந்து வேண்டிய அளவு பொருளை எடுத்துச் சென்று படை பலத்தை பெருக்கு!' — என்று ஆணையிட்டான்.

சிறந்த சிவபக்தனான தளபதி, ஏராளமான திரவியத்தை எடுத்துக்கொண்டு கோவிலுக்குச் சென்றான், கோபுரம் ஆயிரங்கால் மண்டபம் போன்றவை கட்டுவதற்கே அத்தனைப் பணத்தையும் செலவிட்டான். பணம் கோவிலில் தண்ணீராய் செலவாவதை ஒற்றர் மூலம் அறிந்த பாண்டியன் தளபதியை அழைத்து, ''புதிய படை என்னவாயிற்று?'' என்று கேட்டான். தளபதியும் பல நாடுகளுக்கு ஓலை அனுப்பி இருப்பதாய் கூறி சமாளித்தான். என்றாலும் குலபூஷண பாண்டியன், ''நாளை சூரியன் மறையும் முன் புதிய படை இங்கு வந்து விடவேண்டும்! '' — என்று இறுதிக் கட்டளை இட்டார்.

செய்வதறியாது திகைத்த சௌந்தர சாமந்தன் '' நீயே கதி'' என்று சொக்கலிங்கத்தைச் சரணடைந்தான். அபயம் என்று வந்தோரை அருளும் அவ்விறைவன், நாளை படை வீரர்களுடன் நாம வருகிறோம். நீ பாண்டியனுடன் சபையில் இரு !'' என்ற அசரீரி எழுப்பினர். அவ்வாறே

மறுநாள் சிவக்கணங்கள் படை வீரர்களாகவும் சிவபெருமான் படைத் தலைவராயும் வேடம் தாங்கிப் பெரும் படையாய் வந்து சேர்ந்தனர். அது கண்டு மகிழ்ந்தான் பாண்டியன். அதற்குள் ஓடி

வந்த ஒற்றன் 'சேதிராயன் புலியால் தாக்கப்பட்டு இறந்தான்!"— என்ற செய்தியைக் கூறினன். பகை ஒழிந்ததால் படைதேவை இல்லை என்று கருதிய பாண்டியன் வீரர்களை அவரவர் நாடுகளுக்கே அனுப்பிவிடு" — என்று தளபதியிடம் கூறியதும் அப்படை வீரர் மறைந்தனர். இது கண்டு திகைத்த பாண்டியன் இதுவும் இறைவனின் திருவிளையாடல் என்பதறிந்து நெஞ்சு உருகி நின்ருன்.

31. உலவாக் கிழி அருளிய வரலாறு :

குலபூஷண பாண்டியன் அந்தணர்களை மதிக்காது ஒதுக்கினன். எனவே அவர்கள் வேதம் ஓதாது, வேள்வி இயற்ருது வேற்று நாடுகளுக்குச் செல்லத் தொடங்கினர். ஆகையால் பாண்டி நாடு மழையின்றி பஞ்சத்தின் வசப்பட்டது. அரசரின் செல்வமும் தீர்ந்தது.

இதனுல் வேதனை அடைந்த பாண்டியன் இறைவனைப் பிரார்த்தித்தான். பாண்டியனின் கனவில் தோன்றிய இறைவன், அவன் செய்த பிழையையும், அந்தணர் பெருமையையும்,வேதம் யாகம் ஆகியவற்றின் அவசியத்தையும் உணர்த்தி 'உலவாக் கிழி'யையும் அளித்து மறைந்தார்.

(உலவாக்கிழி என்பது பொன் முட்டை. அதில் இருந்து எவ்வளவு பொன்னை எடுத்தாலும் குறையாது. நிறைந்தே இருக்கும் தன்மை உடையது).

விழித்து எழுந்த பாண்டியன் தன் கையில் உண்மையிலேயே பொற்கிழி இருப்பதைக் கண்டு வியந்தான். பல நாடுகளிலும் இருந்து மறையோரை வரவழைத்து வேதம் ஓதுவித்தான், யாகம் இயற்றினன். பொன்னை வாரிவாரி வழங்கினன்.

பாண்டியநாட்டில் மழை பெய்து வளம் பெருகி நலம் நிலவிற்று.

32. வளையல் விற்ற வரலாறு :

தாருகா வனத்தில் இருந்த முனிவர்களின் மனைவியர்-பிட்சாடனர் வேடமிட்டு வந்த சிவபெருமானை நோக்கிக் காம வசப்பட்டனர். கை வளையல் கழல பிச்சை இட்டு 'வளையலை'ப் பறி கொடுத்தனர். இதனுல் கோபம் கொண்ட முனிவர்கள், அந்த ரிஷிபத்தினிகளை, 'மதுரையில் வணிகப் பெண்களாய்ப் பிறப்பீர்! - என்று சாபமிட்டு; தொடர்ந்து, 'சிவபெருமான் உங்களை தொட்டதும் சாபம் அகலும்!' என்று சாப விமோசனமும் கூறினர். அதன்படி —

சோமசுந்தரக் கடவுள் வளையல் வியாபாரியாக வேடம் தாங்கி வணிகத் தெருவிற்கு வந்தார். அத்தெருவில் இருந்த வணிகமகளிர்

தத்தம் மாளிகைகளில் இருந்து வெளிப்பட்டனர். வளையல்களின் அழகைவிட வளையல் வியாபாரியின் அழகு அவர்களைக் கவர்ந்தது. வளையல் போட்டுக்கொள்ள போட்டி இட்டு கை நீட்டினர். வளையல் போடும் சாக்கில் — வியாபாரியாய் வந்த இறைவன் அவர்களைத் தீண்டினார். பின்—

வியாபாரி மறைய — வானத்தில் சிவலிங்கம் தோன்றியது. ரிஷிபத்தினிகளின் சாபம் நீங்கியது.

33. அஷ்டமாசித்தி உபதேசித்த வரலாறு :

கார்த்திகை மகளிர் அறுவர் சிவபெருமானிடம் எட்டு வகைச் சித்திகளான-அஷ்டமா சித்தி உபதேசம் பெற்றனர். உபதேசித்த பின் சிவபெருமான், - 'அஷ்டமா சித்திகளுக்குத் தலைவி உமாதேவி. எனவே அவளைத் தொடர்ந்து தியானித்து வரவேண்டும்' என்ற நிபந்தனை விதித்தார். கார்த்திகை மகளிரோ பார்வதி தேவியைச் சிந்திக்க தவறி சித்திகளை மறந்து விட்டனர். இதை அறிந்த சிவபெருமான், 'பட்டமங்கை என்னும் ஊரில் ஆலமரத்தடியில் கற்களாகக் கிடப்பீர்;'- என்று கார்த்திகை மகளிர் ஆறு பேரையும் சபித்தார். அவர்கள் அங்கு கற்பாறையாக மாறினர்.

ஆயிரம் ஆண்டுகள் கடந்தன. மதுரையில் சோமசுந்தரக் கடவுளாய் வந்து திருவிளையாடல்கள் புரிந்து அடியார்களைக் காத்து வரும் சிவபெருமான் கார்த்திகை மகளிருக்கும் சாபவிமோசனம் தர கருத்துக்கொண்டரர். ஞான ஆசிரியர் வடிவம் தாங்கினார். பட்ட மங்கலம் வந்து அக்கற்பாறைகளின் மீது அருள் நோக்கம் சாத்தினார். பாறைகள் — சாபம் நீங்கி கார்த்திகை மகளிராயினர். தம்மைத் தொழுத அவர்கட்கு மீண்டும் அஷ்டமாசித்தி உபதேசித்து அருளினார்.

34. விடை இலச்சினை இட்ட வரலாறு:

காஞ்சி நகரை ஆண்ட காடு வெட்டிய சோழன் என்பவன் சிறந்த சிவபக்தன். அவன், மதுரையில் எழுந்தருளி உள்ள சோம சுந்தரக் கடவுளைத் தரிசிக்க வேண்டும் என்று பெரு விருப்பம் கொண் டிருந்தான். ஒரு நாள் கனவில் சிவபெருமான் சித்தர் வேடத்தில் தோன்றி, 'நீ மட்டும் தனியாய் இன்றே புறப்பட்டு மதுரைக்கு வா. மாறுவேடத்தில் வந்து என்னைத் தரிசித்துச் செல்!' — என்று கூறி அருளினார்.

அவ்வாறே சோழன் யாரும் அறியாமல் மாறுவேடத்தில் நடந்தே மதுரைக்குப் புறப்பட்டான். வைகைக்கரையை அடைந்தான்.

வைகையில் வெள்ளம் கரை புரண்டு ஓடுவதைக் கண்டு — கடக்கும் வழி அறியாது திகைத்தான். அப்போது இறைவன் — சித்தர் வேடத்தில் தோன்றி ஆற்று நீரை வற்றச் செய்தார். வடக்கு மதிலின் வாசலைத் திறந்து உள்ளே அழைத்துச் சென்றார். பொற்றாமரைக் குளத்தில் சோழனை நீராடச் செய்தார். தம்மையும், மீனாட்சி அம்மையையும் மனம் குளிர வணங்குவித்தார்.

தரிசனம் முடிந்த பின் சோழனை — அதே வடக்கு வாசல் வழியே அழைத்துச் சென்று வைகை வடகரை வரை துணை வந்து வழி அனுப்பி வைத்தார். இறைவன் திரும்பித் தன் ஆலயம் செல்லும் போது வடக்கு மதில் கதவை மூடி இடபமுத்திரை இட்டார்.

மறுநாள், காவலர், எல்லா வாசல்களிலும் தாம் வைத்த மீன் முத்திரை இருக்க வடக்கு வாசலில் மட்டும் இடபமுத்திரை இருந்தது கண்டு, உடனே பாண்டியனுக்குத் தெரிவித்தனர். பாண்டியனும் முத்திரை மாறியதன் காரணம் அறியாது திகைத்தான். அன்றிரவு அவனது கனவில் தோன்றிய இறைவன் நடந்ததைத் தெரிவித்து — தாமே இடபமுத்திரை பொறித்ததையும் உணர்த்தி மறைந்தார்.

விழித்தெழுந்த குலபூஷண பாண்டியன் சிவபெருமானின் திருவிளையாடலை — கருணைத் திறத்தை எண்ணி வியந்தான்.

35. தண்ணீர் பந்தல் வைத்த வரலாறு

இராஜேந்திர பாண்டியன் மதுரை ஆண்டு வந்த போது —

காடு வெட்டிய சோழன் தன் மகளை அவனுக்கு மணம் முடித்துத்தர இசைந்தான். இதைக் கேள்விப்பட்ட இராஜேந்திர பாண்டியனின் தம்பி அரசசிங்கன் யாரும் அறியாது காஞ்சி நகருக்கு சென்று சோழனைக்கண்டு பேசி அவனது மகளைத்தானே திருமணம் செய்துகொண்டான். எனவே —

தம் மருமகனை பாண்டிய நாட்டின் அரசனாக்கப் பெரும் சேனை யுடன் பாண்டிய நாட்டின் மீது போர் தொடுத்தான் காடுவெட்டிய சோழன். இதை அறிந்த பாண்டியன் சிவபெருமானைத் தஞ்சம் அடைந்தான். இறைவனின் திருவருளால், 'நீ சோழனுடன் போரிடு. வெற்றி உனக்கே!' என்ற அசரீரி எழுந்தது. இறையருளின் துணை யுடனும் தன் சிறு படையுடனும் போர்க்களத்திற்கு வந்தான் பாண்டியன்.

பெரும்போர் தொடங்கியது. கூடவே வெயிற்காலம்! சூரியனின் வெம்மை வீரர்களை வாட்டியது. பாண்டிய வீரர்களைக் காக்கும் பொருட்டு இறைவன் தவக் கோலம் பூண்டு பாண்டிய படை நடுவில் தண்ணீர் பந்தல் அமைத்து வெயிலின் வெம்மையில் இருந்தும் பாண்டிய வீரர்களைக் காத்தார். இறைவனிடம் நீர் பெற்று பருகிய பாண்டிய வீரர் மிகுந்த பலம் பெற்றவராய் சோழப்படை மீது சாடி—அழித்து வெற்றிக்கொடி நாட்டினர். கைது செய்யப்பட்ட காடுவெட்டிய சோழனையும், தம்பி அரசசிங்கப் பாண்டியனையும் - இராஜேந்திர பாண்டியன் மன்னித்து அனுப்பினர். பகைவரையும் மன்னிக்கும் பண்பால் பெரும் புகழ் பெற்றான் இராஜேந்திரப் பாண்டியன்.

36. இரசவாதம் செய்த வரலாறு

மதுரைக்கு அருகில் உள்ள திருப்பூவனத்தில் பொன்னையாள் என்னும் கணிகை இருந்தாள். திருப்பூவன நாதரின்கோவிலில் பணி யாற்றிய அவள் அழகு மிகுந்தவள். சிறந்த சிவபக்தி கொண்டவள். அவளது பக்திப் பெருக்கை உலகத்தவருக்கு உணர்த்தத் திருஉளம் கொண்டார் சிவபெருமான்.

பொன்னனையாள் தினந்தோறும் தம் வீட்டில் சிவனடியார் பலருக்குத் திருவமுது படைத்து வந்தாள். ஒருநாள் சிவபெருமான் சித்தர் வேடம் தாங்கி அவளது வீட்டிற்கு வந்தார். ஆனால் மற்ற அடியார்களுடன் திருவமுது செய்யாது திண்ணையில் தனியே அமர்ந்திருந்தார். அது கண்ட வேலைக்காரி சாப்பிட அழைத்தாள். அவளிடம் "உங்கள் தலைவியை இங்கே அனுப்பு!' — என்றார் சித்தமூர்த்தி. தலைவியிடம் தெரிவித்தாள் பணிப்பெண். விரைந்து வந்தாள் பொன்னனையாள். அவளிடம் சித்தமூர்த்தி "உன் உடல் ஏன் மெலிந்துள்ளது?" என்று கேட்டார். அதற்குப் பொன்னனையாள் "பெருமானே, சிவபெருமானின் திருவுருவத்தைப் பொன்னால் முடிக்க ஆசை! என்னிடம் அவ்வளவு பொன் இல்லை. இதுவே என் மனக்குறை. இம்மனக் குறையே என் உடல் மெலிவிற்குக் காரணம்!" — என்றாள். உடனே சித்தமூர்த்தி அவளது வீட்டில் உள்ள பித்தளை, ஈய பாத்திரங்களைக்கொண்டு வரச்சொல்லி அவற்றின் மீது திருநீற்றினைத்தூவினர். "இன்றிரவு இவற்றை நெருப்பில் இட்டால் எல்லாமே பொன்னாகி விடும் என்று கூறி மறைந்தார்.

உடனே பொன்னனையாள் வந்தவர் மதுரையில் கோவில் கொண்டுள்ள சோமசுந்தரக் கடவுளே என்பதை அறிந்து ஆனந்தப் பரவசத்துடன் மெய்மறந்து நின்றாள். அன்றிரவே ஈய, பித்தளைப் பாத்திரங்களைநெருப்பில் இட்டு தங்கம் ஆக்கிஇறைவனின் திருஉருவத்

தைப் பொன்னல் சமைத்தாள். பொன்னனையாளின் மனக்குறை இறைவனின் ரசவாதத் திருவிளையாட்டால் நீங்கியது.

37. சோழனை மடுவில் வீழ்த்திய வரலாறு :

மதுரை ஆண்ட சுந்தரேச பாதசேகர பாண்டியனிடம் படை பலம் குறைவு சோழனின் படை பலம் ஆயிரம் அதிகம். எனவே அவன் பாண்டியனை வெல்ல பெரும்படையுடன் வந்தான். ஒற்றர் மூலம் செய்தி அறிந்த பாண்டியன் சோமசுந்தரக் கடவுளின் அருட்துணை வேண்டி பிரார்த்தித்தான். 'வெல்வாய்; நாமே வந்து போர் செய்வோம்!'-என்ற அசரீரி எழுந்தது. துணிவுடன் போருக்குச் சென்றான் பாண்டியன்.

பாண்டியன் படைகளின் முன் சிவபெருமான் வேடர் வடிவம் தாங்கி குதிரை மீது வந்தார். இறைவனின் வாள் வீச்சையும் வேல் வீச்சையும் கண்டு அஞ்சி புறமுதுகிட்டு ஓடினன் சோழன். இறைவன் மறைந்தான். சோழனைத் தொடர்ந்து துரத்திச் சென்றான் பாண்டியன். சிறிது தூரம் சென்று திரும்பிப்பார்த்த சோழன் வேடுவன் இல்லை என்று அறிந்தான். துணிந்து பாண்டியனை எதிர்த்துப் போரிட்டான் கடல் போன்ற சோழப்படை முன் நிற்க முடியாது பாண்டியர் படை பின் வாங்கி ஓடியது. இப்போது பாண்டியனைச் சோழன் துரத்தத் தொடங்கினன். பயந்து ஓடிய பாண்டியன் மடு ஒன்றில் விழுந்தான். சோழனும் விழுந்தான். ஆனல் –

பாண்டியன் இறைவனருளால் உயிர் தப்பி மடுவில் இருந்து வெளியேறினன். சோழன் அங்கேயே இறந்தான்.

38 உலவாக் கோட்டை அருளிய வரலாறு :

மதுரை நகரில் வாழ்ந்து வந்த அடியார்க்கு நல்லான் சிறந்த சிவபக்தன். தினமும் சிவனடியார்களுக்கு உணவு இடுவதைத் தம் கடமையாகக் கொண்டவன். அவனது நற்குணத்தை உலகிற்கு உணர்த்தத் திருஉளம் கொண்டார் சோமசுந்தரக்கடவுள். அதன் விளைவாய் நல்லானின் வயல் விளைச்சல் இன்றி கருகியது. அப்படியும் கடன் வாங்கி அடியார்க்கு உணவிட்டான் நல்லான். சில நாட்களில் கடன் தருவாரும் இல்லை என்றாயிற்று. அதனல் வருந்திய நல்லான் தானும் மனைவியுடன் பட்டினி கிடந்தான். கோவிலுக்குச் சென்றான்.

இறைவனிடம், அடியார்க்கு உணவு இட பொருள் இல்லை கடன் தருவாரும் இல்லை. கடன் தருவாரையாவது காட்டி அருளும். இல்லையேல் நான் உயிரை மாய்த்துக் கொள்வேன்!" — என்றான். அப்போது திருவாக்கு ஒலித்தது. 'உன் வீட்டில் அரிசிக்கோட்டை நிறைத்துள்ளோம். அள்ள அள்ள குறையாது. எப்போதும் அது நிறைந்தே இருக்கும்'. அதைக் கொண்டு அடியார்கட்கு அமுதிடுக!- என்று அசரீரி கேட்டு மகிழ்ந்தான். வீட்டிற்கு வந்தான். கோட்டையாய் குவிந்துள்ள அரிசியைக் கண்டு ஆனந்தித்தான். அடியார்களுக்கு அமுது படைக்கும் திருப்பணி தொடர்ந்து நடந்தது.

39. மாமனாக வந்து வழக்குரைத்த வரலாறு :

தனபதி என்னும் வணிகன் பெருஞ் செல்வந்தன். எனினும் பிள்ளைப்பேறற்றவன். தன் தங்கையின் மகனையே தத்து எடுத்து வளர்த்தார். ஒரு முறை தங்கை கோபத்துடன் அவனை, 'பிள்ளைபேறு அற்ற பாவி!, என்று கூறி விட்டாள். அதனால் மனமுடைந்த தனபதி அடுத்த பிறவியிலாவது பிள்ளைப்பேறு கிடைக்கத் தவம் செய்வேன், என்று மனைவியுடன் வீட்டை விட்டு வெளியேறினான். நெடு நாட்கள் ஆகியும் அவன் வராததால் அவனது செல்வங்களை எல்லாம் தாயத்தார் கவர்ந்து கொண்டனர்.

திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை-என்று கருதிய தனபதியின் தங்கை கோவிலுக்குச் சென்று இறைவனிடம் முறையிட்டு அழுதாள். கருணை கூர்ந்தார் சோமசுந்தரக்கடவுள். நாளை தாயத்தாரை தரும சபைக்கு அழைத்து வா. நாமே வந்து வளக்காடி உனக்குரிய சொத்தை மீட்டுத் தருகிறோம்!', — எனும் 'வான்ஒலி' எழுந்தது. அவ்வாறே மறு நாள் தருமசபையில் முறையிட்டு தாயத்தார்களை வரவழைத்தாள். அப்போது சோமசுந்தரக் கடவுளே தனபதியின் உருவம் தாங்கி வந்து வழக்குரைத்து, தம் சொத்துக்கள் அனைத்தும் தம் தங்கையின் மகனுக்கே உரியன!, என்றார். தருமசபையினரும் அதனை ஏற்று தனபதியின் தங்கை மகனுக்கே சாசனம் எழுதினர். சாசனம் எழுதி முடிந்ததும் தனபதியின் உருவம் தாங்கி வந்த இறைவன் அனைவரும் காண மறைந்தார். வந்தது கடவுளே என்பதை சுந்தரேச பாதசேகர பாண்டியன் உணர்ந்து வணிகச் சிறுவனுக்குப் பரிசுகள் பல வழங்கி கௌரவித்தான்.

40 வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய வரலாறு :

சிறந்த சிவபக்தனன வரகுணபாண்டியன்—ஒருநாள் வேட்டையாடிவிட்டு இரவு மதுரைக்குத் திரும்பும் போது அவனது குதிரையின் காலால் மீதியுண்டு அந்தணன் ஒருவன் இறந்து விட்டான். எனவே பாண்டியனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்து வாட்டியது. தோஷம் நீங்க கோவிலை தினமும் 1008 முறை வலம் வந்தான். அப்போது அவன்மீது படை எடுத்து வந்த சோழனைத் தோற்கடித்து துரத்திச் செல்லும்போது திருவிடைமருதூர் வந்தடைந்தான்.

இறைவனை வணங்க விரும்பிய பாண்டியன் கிழக்குவாசல் வழியே கோவிலுக்குச் சென்றான். கோவிலுக்குள் செல்லமுடியாத பிரம்மஹத்தி கிழக்கு வாசலிலேயே தங்கிவிட்டது. இறைவனைத் தொழுதான் பாண்டியன். "உன்னைப் பிடித்தபிரம்மஹத்தி கிழக்கு வாசலில் நிற்கிறது. எனவே நீ மேற்கு வாசல் வழியே செல்!" —என்ற தெய்வ வாக்கு ஒலித்தது. மேற்கு வாசல் வழியே வெளியே வந்த பாண்டியன் தன் பிரம்மஹத்தி தோஷம் நீக்கிய மேற்கு வாசலில் கோபுரம் கட்டித் தன் நன்றிக்கடனை ஆற்றினன்

வரகுணபாண்டியனுக்குச் சிவலோகத்திற்குச் சென்று அங்கே சிவபெருமான் வீற்றிருக்கும் அழகுக் காட்சியைக் காணவேண்டும் என்ற ஆசை பிறந்தது பக்தனின் ஆசையை அறிந்த இறைவன் சிவலோகத்தை மதுரை நகரிலேயே வரவழைத்தார். நந்தியெம் பெருமானை அழைத்து பாண்டியனுக்குச் சிவலோகம் முழுவதும் காட்டச் செய்தார். பாண்டியன் சிவலோகத்தைச் சுற்றிப் பார்த்து சிவபெருமானின் தரிசனம் பெற்றதும் மீண்டும் அது மறைந்தது. எனவே—

மதுரை நகர்அன்று தொட்டு 'பூலோகச் சிவலோகம்' என்னும் சிறப்பு பெறலாயிற்று.

41. விறகு விற்ற வரலாறு :

வரகுண பாண்டியனின் அரசவைக்கு ஏமநாதன் என்னும் பெயருடைய வடநாட்டு யாழ் பாணன் வந்தான். அவனது இசையைக் கேட்டு மகிழ்ந்த பாண்டியன் பெரும் பரிசில் வழங்கி கௌரவித்தான்.

பாணபத்திரனை அழைத்து "நாளை நீ ஏமநாதனுடன் இசைப் போட்டியிடவேண்டும்" என்று கட்டளையும் இட்டார்.

பாவம், பாணபத்திரன், ஏமநாதனின் இசைப்புலமையை உணர்ந்தவன் தன்னால் அவனுடன் போட்டியிட்டு வெல்ல முடியாது என்பதை அறிந்தவன். எனவே, அனுதினமும் தான் பூஜிக்கும் சோம சுந்தரக் கடவுளிடம் சென்று முறையிட்டான். பக்தனைக் காக்கத் திருவுளம் கொண்டான் இறைவன்.

விறகு வெட்டியாய் வேடம் தாங்கினான். தெருத்தெருவாய் விறகு விற்று அலைந்தான். விலை கேட்போருக்கு வாங்க முடியாத அளவு அதிகவிலை கூறினான். மாலை மயங்கும் நேரத்தில் ஏமநாதன் தங்கி உள்ள வீட்டுத்திண்ணையில் வந்து அமர்ந்தான். சாதாரிப் பண்ணில் இனிய இசை பாடினான். ஆம், ஆடவல்லான் பக்தனுக்காக இசை பாடவும் வல்லானானான்! இசையில் மயங்கிய ஏமநாதன் விறகு வெட்டியிடம், நீ யாரப்பா? என்று கேட்டான்" 'நான் பாண பத்திரனின் மாணவன். என்றாலும் இசைபாட தகுதி இல்லை என்று என்னை ஒதுக்கி விட்டார்!" என்றதும் திகைத்தான் ஏமநாதன். தகுதி அற்ற மாணவனின் இசையே இவ்வளவு உயர்ந்தது என்றால்— தகுதி உள்ள மாணவனின் இசை—அதைக் கற்பிக்கும் ஆசிரியர் பாணபத்திரனின் இசை—நினைத்துப்பார்த்ததும் நடுங்கியது ஏம நாதனின் மனம். பாணபத்திரனுடன் இசைப்போட்டியில் கலந்து கொள்ளப் பயந்த ஏமநாதன் இரவோடிரவாக ஓடிவிட்டான்.

அன்றிரவே பாணபத்திரனின் கனவில் தோன்றிய இறைவன் நடந்ததைத் தெரிவித்தார். மறுநாள் பாணபத்திரன் இவ்வதிசயத்தை எம்பெருமானின் திருவிளையாடலை மன்னனிடம் தெரிவித்தான். ஈசனின் அருட்திறத்தை எண்ணி வியந்தனர்.

42. திருமுகம் கொடுத்த வரலாறு :

தம் திருவிளையாடலால் இறைவன் பாணபத்திரனை ஆட் கொண்ட நாள்முதல் பாணபத்திரன் சோமசுந்தரக் கடவுளைப் பாடுவதே தன் தொழிலாய்க் கொண்டான். பிற வேலைகளை விட் டான். எனவே வருமானம் இன்றி அவனது வீட்டில் வறுமை தலை

விரித்தாடத் தொடங்கியது அடியாரின் துன்பம் காணப் பொறுக்காத இறைவன், பாணபத்திரனின் கனவில் தோன்றி, 'சேரமானிடம் செல், நான் எழுதித்தரும் திருமுகத்தைத்தா. அவன் உனக்கு வேண்டிய பொருள் தருவான்!' எனக் கூறி மறைந்தார். தூக்கம் நீங்கி விழித்த பாணபத்திரன் தன் தலைமாட்டில் இறைவன் சேர அரசனுக்கு எழுதிய திருமுகம் இருக்கக் கண்டு இறைவனின் திருவிளையாட்டை எண்ணி வியந்தான் மறுநாளே சேரநாட்டுக்குப் புறப்பட்டான்.

இறைவன் சேரமானின் கனவிலும் தோன்றி தன் திருமுகத்துடன் வரும் பாணபத்திரனுக்குப் பெருநிதியம் அளிக்குமாறு ஆணையிட்டார். அவ்வாறே சேரமான் பாணபத்திரனை எதிர்கொண்டழைத்து இறைவன் திருமுகத்தைப் பெற்று மகிழ்ச்சியுடன் ஏராளமான பொருட்களைக் கொடுத்தனுப்பினான். குசேலனாய் மதுரையிலிருந்து புறப்பட்ட பாணபத்திரன் குபேரனாய் மதுரைக்கு வந்து சேர்ந்தான்.

43. பலகை இட்ட வரலாறு:

அன்று மதுரையில் சரியான மழை. என்றாலும் இறைவன் திருப்பள்ளி அறைக்கு எழுந்தருளும் போது பாணபத்திரன் கோவிலுக்குப் போய் பாடாதிருப்பதோ?' இரவின் இருளையும் மழையின் வலிமையையும் பொருட்படுத்தாது நனைந்தவாறே கோவிலுக்கு வந்தான் பாணபத்திரன். தான் செய்த சோதனைகளை எல்லாம் வென்று வந்து பாடும் பாணபத்திரனுக்கு இறைவன் நவமணி இழைத்தப் பொற்பலகை வழங்கி, 'இது உனக்கு உரியது. இதன்மேல் நின்று பாடு'- என்று விண்ஒலி எழுப்பி அருளினார்.

மறுநாள் காலையில்-பாணபத்திரனுக்கு இறைவன் பொற்பலகை வழங்கியதை அறிந்த வரகுணபாண்டியன் தானும் அவனுக்கு ஏராளமான பரிசில்களைத் தந்து போற்றி கௌரவித்தான்.

44. இசைவாது வென்ற வரலாறு :

இராசராச பாண்டியனின் காமக்கிழத்தியருள் ஒருத்தி பாணபத்திரனின் மனைவி மீது பொறாமை கொண்டாள். இசையில் அவளைத் தோற்கடிக்க விரும்பினாள். ஈழநாட்டுப் பாடகியை

வரவழைத்தாள். காமவசப்பட்டு அறிவிழந்த பாண்டியனும் தன் காமக்கிழத்தியின் சொற்படி பாணபத்திரனை இசைப் போட்டிக்கு அழைத்தான்.

முதல்நாள் போட்டியில் பாண்டியன் நீதிக்கு மாருக ஈழநாட்டுப் பாடகியின் இசையைப் பாராட்டி நாளையும் போட்டி தொடர்ந்து நடக்கும் என அறிவித்தான். இதனல் மனமொடிந்த பாணபத்திரனின் மனைவி இறைவனிடம் முறையிட்டாள். 'நீயே வெல்வாய்?'- என்ற திருவாக்கு எழுந்தது. மறுநாள் போட்டியிலும் பாண்டியன் நீதிக்குப் புறம்பாக ஈழநாட்டுப் பாடகியைப் பாராட்டவே சினம் கொண்ட பாணபத்திரனின் மனைவி நாளை இறைவன் முன் போட்டி நடக்கும். அங்கு யாரேனும் ஈழநாட்டுப் பாடகியின் பாட்டைப் பாராட்டினல் அந்தத் தீர்ப்பை - என் தோல்வியை நான் ஒப்புக்கொள்கிறேன்!' என்ருர்.

அவ்வாறே மறுநாள் கோவிலில் சோமசுந்தரக் கடவுளின் சந்நிதியில் போட்டி நடந்தது. இறைவன் முன் நீதிக்கு மாருன தீர்ப்பு கூற முடியாத பாண்டியன் தன்னையும் மீறி பாணபத்திரனின் மனைவி பாடிய பாட்டைப் பாராட்டி விட்டான். ஈழநாட்டுப் பாடகியின் தோள்மீது பாணபத்திரனின் மனைவியை உட்காரவைக்குமாறு தீர்ப்பும் கூறினுன். 'அப்போது அங்கு புலவர் வேடத்தில் வந்திருந்த இறைவன் 'அற்புதம்! அற்புதம்!-' என்று கூறி பலரும் அறிய மறைந்தார்.

ஈசன் திருவிளையாடலை உணர்ந்தனர், உவகை கொண்டனர்.

45. பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த வரலாறு :

சுகலன் என்னும் வேளாளரின் மக்கள் பன்னிரண்டு பேர். இவர்கள் வியாழ பகவானின் சாபத்திற்கு ஆளாகி குருவிந்தத்துறைக்கு அருகே உள்ள காட்டில் பன்றி அரசரின் குழந்தைகளாய்ப் பிறந்தனர். இராசராச பாண்டியன் வேட்டையாட வந்தபோது பன்றி அரசனும் அவனது மனைவியும் பாண்டியனுடன் போரிட்டு இறந்தனர். பெற்ருேரை இழந்த பன்றிக் குட்டிகளின் துயர்தீர — சோமசுந்தரக் கடவுளே தாய்ப்பன்றியின் வேடந்தாங்கி வந்து முலைப்பால் தந்து சாபவிமோசனம் அருளினுர். சாபம் நீங்கி, மனித உடலும்

பன்றி முகமும் கொண்ட சகோதரர்கள் பன்னிரண்டு பேரும் சகல கலைகளிலும் சிறந்தவர்களாய் பன்றி மலையிலேயே வசித்து வந்தனர்.

46. பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய வரலாறு

தன் அருள் விளையாட்டால் சாபம் நீங்கப்பெற்ற பன்றி முகச் சகோதரர்களை பாண்டியனின் அமைச்சர்களாக்கத் திருவுளம் கொண்டார் சோமசுந்தரக் கடவுள். பாண்டியனின் கனவில் தோன்றி "பன்றி மலையில் வாழும் பன்றிமுக வீரர் பன்னிருவரை உன் அமைச்சர்களாக்கிக் கொள்!"—என்று கட்டளை இட்டார் ஈசன். தெய்வக் கட்டளைப்படி பாண்டியன் சகோதரர் பன்னிருவரையும் வரவழைத்து தன் அமைச்சர்களாக்கிக் கொண்டான். பழைய மந்திரிகளின் பெண்களை அவர்களுக்கு மணமுடித்து வைத்து பன்றிமுக அமைச்சர்களின் துணையுடன் நீண்டநாள் நல்லாட்சி செலுத்தி ஈசன் அடியை அடைந்தான். பன்றி முக வீரர்களும் சிவகணங்களுடன் சேர்ந்து சிறப்பு பெற்றனர்.

47. கரிக்குருவிக்கு உபதேசம் செய்த வரலாறு

இராசராச பாண்டியன் காலத்தில் புண்ணியம் பல செய்த ஒருவன் சிறிதளவு பாவமும் செய்ததால் கரிக்குருவியாய்ப் பிறந்தனன். அக்கரிக்குருவி சிவனடியார் ஒருவரின் உபதேசத்தால் மதுரைத் தலத்தின் சிறப்புணர்ந்து மதுரைக்கு வந்தது. பொற்றாமரைக் குளத்தில் நீராடி தினமும் சோமசுந்தரக் கடவுளை வணங்கியது. அதனால் அருள் கூர்ந்த இறைவன் அக்கரிக்குருவிக்கு 'மிருத்திஞ்சய' மந்திரத்தை உபதேசித்து எல்லாப் பறவைகளிலும் வன்மையுடைய பறவையாய்த் திகழும் வரமும் தந்தார். தான் மட்டும் இன்றி தன் இனமே வல்லமையுடன் திகழ வேண்டும் என்ற மறுவரமும் இறைவனிடம் கேட்டுப் பெற்றது கரிக்குருவி. எனவே கரிக்குருவிக்கு 'வல்லான்' என்ற காரணப்பெயரும் அன்று முதல் வழங்கி வரத்தொடங்கியது.

48. நாரைக்கு முக்தி கொடுத்த வரலாறு

நாரை ஒன்று மதுரைத் தலத்தின் புனிதத்தை உணர்ந்து மதுரை நகருக்கு வந்தது. தினமும் பொற்றாமரைக் குளத்தில் நீராடி சோமசுந்தரக் கடவுளைத் தொழுதது. இவ்வாறு பதினைந்து நாள்

தொழுது மறு நாளும் குளத்தில் நீராடச் சென்றபோது இறைவன் தோன்றி நாரையைத் தம்முடன் சிவலோகத்திற்சேர்த்து முக்தி கொடுத்தருளினர். இறைவனிடம் நாரை, "தேவா! இப்புனித குளத்தில் உள்ள மீன்களை எம் இனத்தவர் உண்டால் அவர்களைப் பாவம் பற்றிக் கொள்ளும். எனவே இக்குளத்தில் மீனே இல்லாமல் செய்தருள வேண்டும்!''—என்ற வரமும் கேட்டுப் பெற்றது. அன்று முதல் இன்றுவரை பொற்றாமரைக் குளத்தில் மீன்களோ—ஏனைய நீர் வாழ் உயிர்களோ இன்றி ஒழிந்தன.

கூடற்காண்டம் முற்றும்

49. திருவாலவாய் ஆன வரலாறு

ஊழிக் காலத்திற்குப்பின் மீண்டும் உலகமும் உயிர்களும் படைக்கப்பட்டன. வங்கிய சேகரபாண்டியன் மதுரையில் மக்கள் வாழ இடம் போதாமல், பழைய மதுரை நகர எல்லையைக் காட்டி" அருளுமாறு சோமசுந்தரக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டான். சித்தர் உருவம் ஏற்று வந்த இறைவன் தன் கையில் கங்கணமாய் அமைந்துள்ள பாம்பை விடுத்து பாண்டியனுக்கு நகர எல்லை காட்டு மாறு பணித்தார். பாம்பும் கிழக்கே சென்று வாலை நீட்டி வலமாய் உடலை வளைத்து வாலைத் தனது வாயில் வைத்து நகர எல்லையைக் காட்டியது. எனவே மதுரை திருவாலவாய் எனும் பெயரும்பெற்றது

50. சுந்தரப் பேர் அம்பு எய்த வரலாறு

விக்கிரம சோழன் வட நாட்டு மன்னர்களின் துணையுடன் பெரும் படை கொண்டு வங்கிய சேகரபாண்டியன் மீது போர் தொடுத்தான். கடும் போரில் பாண்டியப் படை தோல்வி அடைந்தது. வெற்றிச் சங்கு ஊதினன் சோழன். அப்போது சோமசுந்தரக்கடவுள் வேட்டுவ வீரன் வடிவம் ஏந்தி வந்து கணை தொடுத்தார். ஓர் அம்பு பதினாயிரம் வீரர்களைக் கொன்றது கண்டு திகைத்த சோழன் அம்பை எடுத்துப் பார்த்தான். அதில் 'சுந்தரேசன் என்னும் பெயர் எழுதப்பட்டிருந்தது. இது இறைவனின் செயல் என்று அறிந்த சோழன் தோற்றான். இறைவனின் துணையால் பாண்டியன் வெற்றி பெற்றான்.

51. சங்கப் பலகை கொடுத்த வரலாறு.

பிரம்மனின் சாபத்தால் சரஸ்வதி 49 சங்கப்புலவர்களாகப் பிறந்தாள். இப்புலவர்கள் மதுரையில் சங்கம் அமைத்து — வரும் புலவர்களுடன் வாதிட்டு புலமைத் தகுதியை நிர்ணயித்து வந்தனர். இப்பணிக்கு சீர்தூக்கி அளக்கும் கருவியாய்ச் சங்கபலகை தந்தருளுமாறு சோமசுந்தரனைப் புலவர்கள் வேண்டினர். இறைவனும் தெய்வீகச் சங்கப்பலகை ஒன்றை புலவர்களிடம் தந்தான். ஒரு முழச் சதுரம் உள்ள இப்பலகை புலமை மிக்க ஒவ்வொருவருக்கும் ஒரு முழம் வளர்ந்து இடம் தரக்கூடியது.

52. தருமிக்குப் பொற்கிழி அளித்த வரலாறு :

சண்பகப் பாண்டியன் மனதில் ஓர் ஐயம் எழுந்தது. 'தன் அரசியின் கூந்தலில் உள்ள மணம் இயற்கையானதா? செயற்கையா? என்பதே அச்சந்தேகம்.

தன் மனதில் உள்ள சந்தேகத்தைத் தீர்ப்போருக்கு ஆயிரம் செம்பொன் அடங்கிய முடிப்பு தருவதாக அறிவித்தான் பாண்டியன்.

தருமி ஏழைப் பிரம்மச்சாரி அவன் சோமசுந்தரக் கடவுளின் திருமுன்வந்து தான் திருமணம் செய்து கொள்ள விரும்புவதால் அப்பணமுடிப்பைத் தனக்கே பெற்றுத் தருமாறு!" வேண்டினன். இறைவனும் செய்யுள் ஒன்றை இயற்றித்தந்தார்.

இறைவனின் செய்யுளில் பொருட் குற்றம் கண்டுமறுத்தான் நக்கீரன். மனமொடிந்த தருமி இறைவனிடம் முறையிட புலவர் வேடந்தரித்து அரசவைக்கு வந்தார் இறைவன். நக்கீரனுடன் வாதிட்டார். சினத்தில் நெற்றிக்கண்ணைத் திறந்தார். வெம்மை தாளாது பொற்றாமரைக் குளத்தில் போய் விழுந்தான் நக்கீரன். இறைவன் மறைந்தான்.

53. கீரனைக் கரை ஏற்றிய வரலாறு :

நக்கீரன் இல்லாத சங்கம் பொலிவிழந்தது. புலவர்கள் நக்கீரனை மன்னித்துக் காக்குமாறு மன்றாடினர். அருள் கூர்ந்த இறைவன்

தேவியுடன் பொற்றாமரைக்குளத்திற்கு வந்தார். அன்று நக்கீரனை அனற் கண்ணால் நோக்கிய இறைவன் இப்போது அருட்கண்ணால் நோக்கினார். கீரனின் உடல் வெம்மை தணிந்து, நீங்கியது. நக்கீரன் கரையேறினான்.

54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த வரலாறு

நக்கீரன் இலக்கணத்தைச்சரியாக கற்காத குறையினாலேயே தன் செய்யுளுக்குக் குற்றம் கண்டான் என்பதை உணர்ந்த இறைவன் அகத்திய முனிவனைக் கொண்டு நக்கீரனுக்கு இலக்கணம் கற்பித்தார்.

55. சங்கத்தார் கலகம் தீர்த்த வரலாறு :

சங்கப் புலவர்கள் தத்தம் பாடலே சிறந்தது எனக் கூறி தங்களுக்குள் கலகம் செய்து கொண்டனர். கடைசியில் கலகம் தீர வழிகாட்டுமாறு சோமசுந்தரக்கடவுளை வேண்டினர். இறைவன் தனபதியின் மகனும் — ஊமையும் — சிறுவனுமான ஒருவனைக்காட்டி 'இவன் முருகனின் அவதாரம். இவன் சிறந்த பாடல்களைக் கேட்டால் தலை அசைத்து ரசிப்பான். இவன் துணையால் உங்கள் கலகத்தை தீர்த்துக் கொள்வீர்!' — என்றருளி மறைந்தார். புலவர்களும் அவ்வூமைச் சிறுவன் முன் தம் படைப்புகளைப் படித்துக்காட்டி தகுதியை முடிவு செய்து வரலாயினர்.

56. இடைக்காடன் பிணக்கு தீர்த்த வரலாறு

குலசேகர பாண்டியன் புலமை நிறைந்தவன். சங்கப்பலகையில் இடம் பெற்ற அரசன். அவனது புலமையைக் கேள்விப்பட்ட, பெரும் புலவரான இடைக்காடர் தாம் இயற்றிய பிரபந்தத்தை அரசன் முன் பாடினான். புலமைப் பொருமை,கொண்ட பாண்டியன் பிரபந்தத்தை ரசிக்காது சிலைபோல் இருந்தான். இதனால் கோபம் கொண்ட இடைக்காடர் இறைவனிடம் முறையிட்டார். பாண்டியனுக்கு அறிவு புகட்ட திருஉளம் கொண்ட இறைவன். தேவியுடன் கோவிலில் இருந்து நீங்கி வைகையின் மறுகரையில் கோவில் கொண்டார். ஆலயத்தில் இறைவனைக்காணாது — எதிர்கரையில் சங்கப்புலவர்களுடன் இறைவன் எழுந்தருளி இருப்பதைக் கண்டவர்கள் மன்னரிடம் அறிவித்தனர். அஞ்சி ஓடி வந்த அரசன் இறைவனைப் பணிந்து 'தான்

செய்த பிழை யாது?' என்று கேட்டான். இடைக்காடரின் புலமையை மதிக்காததை இறைவன் சுட்டிக்காட்டி மீண்டும் தம் கோவிலுக்கே திரும்பினார். பாண்டியனும் இடைக்காடருக்கு உரிய மரியாதைகளைச் செய்து சீர் வரிசைகள் பல வழங்கினான்.

57. வலை வீசிய வரலாறு

பார்வதி தேவி. சிவபெருமானின் சாபத்தால் மண்ணுலகில் பிறந்து செம் டவர் தலைவனின் மகளாய் வளர்ந்தாள். அவள் தக்கப் பருவம் எய்தியதும் இறைவன் தேவியை மணந்து சாபவிமோசனம் தரத்திருவுளம் கொண்டார். வலைஞன் வேடம் தாங்கி வந்தார். செம்படவத் தலைவன் வலைஞன் வேடம் தாங்கிய இறைவனிடம் "இக்கடலில் கொடிய சுருமீன் உள்ளது. அதைப் பிடித்தால் என் மகளை உனக்கு மணமுடித்துத்தருகிறேன்; என்றான். இறைவனும், வலைவீசி சுருமீனைப் பிடித்து வலைச்சியை மணந்தான். மணம் முடிந்ததும் இருவரும் மறைந்தனர். விண்ணில் மணக்கோலத்தில் சிவ-பார்வதி காட்சி அளித்தனர்.

58. வாதவூரடிகளுக்கு உபசரித்த வரலாறு

அமாத்தியர் குடியில் தோன்றிய திருவாதவூரார் பாண்டியனின் முதலமைச்சராய்ப் பணியாற்றினார். ஒரு நாள் மன்னர் மிகுந்தபொருள் தந்து குதிரைகளை வாங்கி வருமாறு அனுப்பினார். குதிரை வாங்கப் புறப்பட்ட திருவாதவூராரை இறைவன் ஞானசிரியர் வடிவில் திருப்பெறுந்துறை என்னும் தலத்தில் ஆட்கொண்டு உபதேசித்தார். ஞான உபதேசம்பெற்ற திருவாதவூரார் குதிரை வாங்கக் கொண்டு வந்த பொருளை எல்லாம் கோவில் கட்டவும். சிவதருமங்கள் செய்யவும் செலவழித்து ஊர் திரும்பினார். மன்னரிடம் குதிரைகள் வந்து கொண்டிருக்கின்றன என்று கூறி பாரத்தை இறைவன் மீது போட்டுவிட்டு அமைதியாய் இருந்தார்.

59. நரி பரியாக்கிய வரலாறு

குறித்த நாளில் குதிரை வராது போகவே சினம் கொண்ட பாண்டியன் திருவாதவூராரைப் பலவகைகளிலும் தண்டித்தார் அதனால் கருணை கொண்ட இறைவன் காட்டில் உள்ள நரிகளை எல்லாம் குதிரைகளாக்கிப் பெரும் குதிரைப் படையுடன் பாண்டியனிடம்

வந்தான். குதிரைகளைக் கண்ட பாண்டியன் மகிழ்ந்தான். திருவாதவூராருக்கும் உரிய கௌரவங்களைச் செய்து அனுப்பினர்.

60. பரி நரியாக்கி வைகை அழைத்த வரலாறு :

அன்றிரவே குதிரைகள் நரிகளாகி காட்டிற்கு ஓடிவிட்டன. அதை அறிந்த பாண்டியன் சினம் கொண்டான். திருவாதவூராரைத் தண்டித்து 'நமது பொருள் முழுவதையும் வாங்குமாறு' காவலர்கட்குக் கட்டளை இட்டான். தண்டனையின் கொடுமை பொறுக்கமுடியாது மூர்ச்சித்து விழுந்தார் திருவாதவூரார்.

இறைவன் சீறி எழுந்து வைகை ஆற்றை நோக்கினர். வைகையும் சீறி எழுந்து வெள்ளம் எனப் பாய்ந்தது.

61. மண் சுமந்த வரலாறு :

வெள்ளத்தைத் தடுக்க அவரவர் பங்குக் கரையை அடைக்குமாறு ஆணையிட்டான் பாண்டியன். பிட்டு விற்கும் வந்திக்கிழவி தனக்கு அளந்து விட்டபங்கை அடைக்கக் கூலி ஆள் கிடைக்காது வருந்தினள். அப்போது இறைவன் கூலிக்காரன் வேடத்தில்பிட்டுக்கு மண் சுமக்க வந்தார். பிட்டை உண்டார். மண் சுமக்காது உறங்கினர். செய்தி அறிந்து கோபம் கொண்டான் பாண்டியன். தன் கையில் இருந்த பிரம்பால் அவனை அடித்தான். அவன் மேல்பட்ட அடி— அண்ட சராசரங்களிலும் உள்ள எல்லா உயிர்கள் மீதும் பட்டது. பின் அவன் ஒரு கூடை மண்ணைச் சுமந்து ஆற்றில் கொட்டியதும் வெள்ளம் அடங்கியது. மண்ணைச் சுமந்தவனும் மறைந்தான்.

62 பாண்டியன் சுரம் தீர்த்த வரலாறு :

கூன் பாண்டியன் சமண மதத்தைத்தழுவினன். அவனது மனைவி மங்கையர்க்கரசி சைவசமயம் சார்ந்தொழுகினள். தன் கணவனைத் திருத்தி சைவத்தின்பாற் திருப்ப விரும்பிய அரசி திருஞானசம்பந்தரின் துணையை நாடினர். சம்பந்தர் பெருமானும் மதுரைக்கு வருகை தந்து மடம் அமைத்துத் தங்கினர். பொறாமை கொண்ட சமணர் சம்பந்தர் மடத்திற்குத் தீ இட்டனர். செய்தி உணர்ந்த சம்பந்தர் "இத்தீ பாண்டியர்க்கும் ஆகவே!" என்றார். பையவே சென்று பாண்டியனைப்பற்றுக! எனப் பதிகம் பாடியதும் தீ பாண்டியனை

அடைந்தது. சுரநோயாய் பற்றியது. சமண முனிவர்களால் அந் நோயைத் தீர்க்க முடியவில்லை. நோயால் துடித்த பாண்டியன் சம்பந்தர் பெருமான் அளித்த திரு நீற்றினால் குணம் பெற்றான்.

63 சமணரைக் கழுவேற்றிய வரலாறு :

பாண்டியன் சைவநெறியின் சிறப்புணர்ந்தான். ஆயினும் பாண்டிய நாடு முழுவதும் சமணக்காடுகளே மண்டிக்கிடந்தன. அவற்றை வேருடன் களையத் திருவுள்ளம் கொண்டார் திருஞான சம்பந்தப்பெருமான். அப்போது எண்ணாயிரம் சமணர்களும் சம்பந் தரைப் போட்டிக்கு அழைத்தனர். மன்னர் முன் நடந்த போட்டியில் சமணர்கள் தாம் கற்ற மந்திரங்களைத் தனித்தனியே பச்சை ஓலைகளில் எழுதி தீயில் இட்டனர். ஓலைகள் அனைத்தும் எரிந்து கருகின. சம்பந்தர் ''போகமார்த்த பூண்முலையாள்' — என்னும் பதிகம் எழுதிய ஏட்டை தீயில் இட்டார். அது எரியாது பசுமையாகவே இருந்தது. அடுத்து —

சமணர்கள் தம் ஏட்டை வையை ஆற்றில் இட்டனர். சம்பந்தரும் ''வாழ்க அந்தணர்'' என்னும் திருப்பதிக ஏட்டை ஆற்றில் இட்டார். சமண ஏடுகள் நீர்வழி சென்றன. சம்பந்தர் இட்ட ஏடு மட்டும் நீர் போக்கை எதிர்த்துச் சென்றது.

இவ்வாறு அனல் வாதத்திலும் நீர் வாதத்திலும் சமணரை வென்று அவர்களைக் கழுவேற்றி சைவம் தழைக்கச் செய்தார், முருகனின் அவதாரமான ஆளுடைப் பிள்ளையார்.

64. வன்னியும் கிணறும் லிங்கமும் அழைத்த வரலாறு

அவள் பெருஞ் செல்வம் இருந்தும் பெற்றோரை இழந்து அனாதையானாள். மதுரையில் இருந்த மாமன் மணமானவன் என்றாலும் அவனுக்கே தன் மகளைத்தரப்போவதாகக் கூறுவர் பெற்றோர். மாமன் வந்து அவளை அழைத்துக் கொண்டு மதுரைக்குப் புறப்பட்டான். வழியில் திருப்புறம்பயம் என்னும் ஊரில் தங்கி இருந்த போது மாமன் பாம்பு தீண்டி இறந்தான். பாவம், அவள் ... பெற்றோரை இழந்து— கணவனாகப் போகின்றவனையும் இழந்த


துயரில் கதறிக் கதறி அழுதாள். அவ்வமயம் அவ்வழி வந்த திருஞானசம்பந்தர் தம் அருள் நோக்கால் மாமனுக்கு உயிர் தந்தார். இங்கிருந்த வன்னிமரம், கிணறு, லிங்கம் சாட்சியாக இருவரையும் மண முடித்து அனுப்பி வைத்தார். என்றாலும்—

மூத்தாள். இளையாளை '' நீ அவரது மனைவி அல்ல, ஆசை நாயகி!'' என்றெல்லாம் ஏசி வந்தாள். அதனால் வருந்திய இளையாள் இறைவனிடம் சென்று தன் நிலை கூறி அழுதாள். இறைவன் மனம் இரங்கினார். வடகிழக்கு திசையில் மூன்று சாட்சிகளும் வந்து தோன்றின.

மூத்தாளை, அனைவரும் பழித்தனர். இளையாள் தன் குண நலத்தால் அவர்களைத் தடுத்து மூத்தாளுடன் அன்புகாட்டி இனிதாய் இல்லறம் நடத்தி வந்தாள்.

—திருவாலவாய்க் காண்டம் முற்றும்—

PLAN OF MEENAKSHI TEMPLE



1. Ashta Sakthi Mandapam 2. Golden Lily Tank 3. Kilikoondu Mandapam
4. Sri Meenakshi's Sanctum Sanctorum 5. Outer Corridor of the Siva Temple
6. Sundareswara's Sanctum Sanctorum 7. Mangayarkarasi Mandapam 8. Thirukalyana Mandapam

Vijaya Printers, 28, Town H Road, Madurai-1.